ISSN 1703-9185

# ஆத்மஜோதி

**Arthmajothy**

**January - March 2010**

விரோதி தை - பங்குனி 2010

இலவச வெளியீடு

3000 பிரதிகள்



சைவப்பெரியார் திரு. நா. சிவலிங்கம்

புதிய இடத்தில் இரா சுப்பர் மார்க்கற்றுக்கு மேல்

# V. K. JEGAN INC.

## Custom Framing Book Depot

இங்கு வீடு குடிபுகுதலுக்கான படங்கள், மற்றும் சுவாமிப் படங்கள், அத்துடன் உங்கள் Photo, திருமணவாழ்த்து மடல்கள் போன்ற பலதரப்பட்ட படங்கள் உங்கள் விருப்பங்களுக்கேற்ற வகையில் Fram செய்து கொடுக்கப்படும்.

அத்துடன் இங்கே, இலங்கை, இந்திய பத்திரிகைகள், சஞ்சிகைகள், நாவல்கள், கனேடிய பாடத் திட்டத்திற்கு அமைவான ஆங்கிலப் பாடப் புத்தகங்களும் உண்டு.

**Kiruba or Siva: 416-265-3605**

**2607 Eglinton Ave. E., Unit 1**
**Scarborough, ON**

# Non-Medical Insurance

வைத்திய பரிசோதனையற்ற
ஆயுட் காப்புறுதியை
பெற்றுக் கொள்ள அழையுங்கள்



## கென் கிருபா

**Ken Kirupa, AICB**
Life Insurance Broker
**416.294.9322**
Liland Insurance Inc,
759 Warden Avenue, Toronto, ON. M1L 4B5.
**www.familyprotection.ca**



உ

சிவமயம்

# ஆத்மஜோதி

தாபிதம்: *1948*

ARTHMA JOTHY
Est. 1948
ISSN 1703-9185

கனடா மலர் 10:
இதழ் 3
விரோதி வருடம்
தை - பங்குனி
திரு. ஆண்டு -2040
ஆங்கில ஆண்டு 2010

**கௌரவ ஆசிரியர்கள்**
பேரறிஞர்
முருகவே பரமநாதன்
டாக்டர் இ. இலம்போதரன்

**பிரதம ஆசிரியர்**
திரு. வி. கந்தவனம்

**உதவி ஆசிரியர்கள்**
திரு. செ. சோமசுந்தரம்
திரு. சிவ. முத்துலிங்கம்

**எழுத்தமைப்பு**
திரு. மா. கனகசபாபதி

**அச்சுப் பதிப்பு**
விவேகா அச்சகம்

**வெளியீடு**
ஆத்மஜோதி
தியான நிலையம்
பதிவு இல: 1476651

**தொடர்பு முகவரி**
Siva Muthulingam
217 Morningside Ave.
Apt. 912
Toronto, ON. M1E 3E4
Tel: (416) 724-6240
www.arthmajothy.org

## உள்ளடக்கம்

1. ஈசன் பாதம் எளிதிற் கிடைத்ததோ
2. எங்குமுள்ள பிள்ளையார்
3. அமரர் திரு. நாகரத்தினம் சிவலிங்கம்
4. தமிழர் திருநாள்
5. Miracle in Kumbakonam
6. Ancieny Hindu Temple
7. ஸ்ரீ கல்யாண வெங்கடேசப் பெருமான் கும்பாபிடேகம்
8. என்றுமுள பரம்பொருள்
9. திருக்கேதீச்சரமும் மகாசிவராத்திரியும்
10. இந்து சமயப் பேரவைச் செய்திகள்
11 சிவதொண்டன் நிலையம் - செல்லத்துரை சுவாமிகள்
12 160,000 have converted out of Hindusim
13. 10ஆம் ஆண்டு திருமுறை விழா 2009
14. திருமுறைகளின் தாற்பரியம் புலால் மறுப்பு
15. சிவஞான போதமும் ரௌரவ
16. ஆகமமும
17. ஆத்மஜோதி சுவாமிகளிடம் கேட்டவை

# ஈசன் பாதம் எளிதிற் கிடைத்ததோ?

பூசு நீறென்ன பொட்டென்ன புன்னகை
வீசும் ஆளுமை வீச்சென்ன வேந்தனின்
தேசு மிக்கச் சிவலிங்க அண்ணலே
ஈசன் பாதம் எளிதிற் கிடைத்ததோ?

சைவத் தொண்டுக்குத் தமிழர் குரலுக்குப்
பொய்யிற் பேச்சுக்குப் புண்ணிய வாழ்வுக்கு
ஐய யாரினி எங்களுக் கதிபதி
செய்கை வீரச் சிவலிங்க அண்ணலே!

பழக்கம் பைந்தமிழ்ப் பண்புகள் இழுக்கிலா
ஒழுக்கம் என்பவை உயிரெனப் பேணினை
விழுப்பம் நன்கு விளங்க நடந்தனை
அழுக்கி லாமனச் சிவலிங்க அண்ணலே!

நற்றமிழ் மக்கள் நாடும் தமிழீழம்
பெற்று வையத்தில் பீடுற வாழவே
உற்ற தொண்டுகள் உளமாரச் செய்தவா
சொற்றிறம் பாத சிவலிங்கத் தோன்றலே!

போற்றிச் செல்வ மலையிற் பொலிவுற
வீற்றி ருள்தெய்வம் யாவையும் வேண்டியே
மாற்றமில் திருத் தொண்டுகள் மாண்புற
ஆற்றினை நாளும் சிவலிங்க அண்ணலே!

தமிழர் மத்தியில் தன்மானத் தலைவராய்
விமலத் தெய்வத்தைப் போல விளங்கினை
அமைதி யாக அடைந்தனை சிவபதம்
சுமைகள் நீங்கிச் சுகமாகத் தூங்குவாய்!

- கவிநாயகர் வி. கந்தவனம்

# எங்குமுள்ள பிள்ளையார்

துன்னாலை
கோயிற்கடவைப் பிள்ளையார்

தும்பிமுகங் கொண்டபெருந் தூய்மை யாளர்
துயர்போக்கி அணைத்தருளும் தாய்மை யாளர்
ஐம்புலத்து வாயில்களை அடைக்க வல்லார்
ஆதாரம் ஆறினையும் அடக்க வல்லார்
செம்பொருளைச் சித்தத்தில் தெளியச் செய்வார்
சிவமாக்கிப் பெருவாழ்வில் திளைக்கச் செய்வார்
கம்பலையில் துன்னாலை கவினார் கோயிற்
கடவையருள் பிள்ளைகழல் காப்ப தாமே. (80)

வலிக்கண்டி
சங்களைப் பிள்ளையார்

வேள்விகளோ நோன்புகளோ விளங்கா வெற்று
வீதியிலும் வீற்றிருக்கும் விமல நாதர்
ஆள்வினையும் நாள்வினையும் காட்டும் பிள்ளை
ஐம்பூத ஆற்றல்களின் கூட்டுப் பிள்ளை
வாழ்வினையில் வல்லவலிக் கண்டி மக்கள்
மதிக்கின்ற சங்களையில் வளரும் பிள்ளை
தாள்பணிவார் சமதருமம் சாந்தம் பேணித்
தாரணியின் மேன்மையினைத் தாங்கு வாரே. (81)

## அமரத்துவச் செய்தி



சைவப் பெரியார் திரு. கந்தையா வைரவநாதன் அவர்கள் 12-02-2010 அன்று அமரத்துவமானார். றிச்மண்ட்கில் இந்து ஆலயத்தின் அறங்காவலர் சபை உறுப்பினராகவும், பொருளாளராகவும் 20 வருடங்களுக்கு மேலாகப் பணியாற்றியவர். இவரின் சமயப் பணிகளை போற்றி இந்து சமயப் பேரவை 2007 திருமுறை மகாநாட்டில் கௌரவித்தது. அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இந்துசமயப் பேரவையினர் பிரார்த்திக்கின்றனர்.

# வீடு, வியாபாரநிலையம் வாங்க விற்க

**Kenga Kumaraswamy**
***Sales Representative***
**Cell: 416-318-0171**
*kengak@hotmail.com*



**HomeLife / Future Realty Inc.**, Brokerage*
7 Eastvale Drive, Suit #205
Markham, ON. L3S 4N8
**Bus: 905-201-9977** **Fax: 905-201-9229**
*Independently owned and operated



# FASHION FLORIST INC

## பாஷன் பூக்களஞ்சியம்

பாபுவின் கைவண்ணத்தில்
**பூக்கள் மாலையாகின்றன**







# 416-754-8282

**4400 Sheppard Ave. East, Unit 5**
**Scarborough, ON.**

# அமரர் திரு. நாகரத்தினம் சிவலிங்கம்

திரு. நாகரத்தினம் சிவலிங்கம் அவர்கள் தமிழீழத்தில் இளவாலை என்னும் பதியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். ஆரம்பக் கல்வியை இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியிலும் இடைநிலைக் கல்வியை தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியிலும் கற்றபின் கொழும்பில் கட்டிடக் கலை பயின்றார். பின்னர் இங்கிலாந்திலும் சில காலம் உயர் கல்வியை மேற்கொண்டபின் 1966ல் கனடாவுக்கு வந்து ரொறன்ரோ பல்கலைக் கழகத்து சென் ஜோஜ் வளாகத்திலும் கட்டிடக் கலையைக் கற்றுப் பட்டம் பெற்றார். பின்னர் சொந்தமாகக் கட்டடிக்கலைத் துறையில் தொழிலை மேற்கொண்டு பல கனடிய அமைப்புகளின் வேலைகளைப் பொறுப்பெடுத்துச் செய்து வரலானார்.

கடந்த 42 வருடங்களுக்கு மேலாக திரு. சிவலிங்கம் அவர்கள் கனடாவில் வாழ்ந்துவரும் தமிழ்ச் சமூகத்தவரின் சமூக, கலாசார, ஆன்மிக வளர்ச்சிக்கு அயராது உழைத்துவரும் ஒரு தலைவராக இயங்கி வருகின்றார். அதனால் இவரைத் தமிழ் மக்கள் தலைவர் சிவலிங்கம் என்றே மரியாதையாக அழைத்து வருகின்றனர். இவரது முயற்சியால் கனடாத் தமிழீழச் சங்கமும் தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக்கான நிறுவனமும் அமைக்கப்பட்டன. தமிழர் தகவல் அமைப்புக்கும் இவர் தலைவராக இருந்து வருகின்றார்.

பல ஆண்டுகளாக, மாநகர. மாகாண, தேசிய மட்டங்களில் நடத்தப்படும் சமூக சேவைக் கூட்டங்களில் தமிழ்க் கனடியரின் பிரதிநிதியாக திரு. சிவலிங்கம் அவர்கள் கலந்து கொண்டு தமிழர் நலன்கள் குறித்துக் கருத்துக்கள் பரிமாறி வந்திருக்கின்றார். அவற்றுள் தெற்காசிய ஆலோசனைக் குழு(ரொறன்ரோ பொலிஸ் சேவை), கனடிய குடிவரவு - குடியுரிமைக் கருத்தரங்குகள், ரொறன்ரோ மாநகரசபை, யோக் பிரதேசம் ஆகியன நடத்திய இன உறவுகள் மற்றும் இனத்துவேச மாநாடுகள் என்பன குறிப்பிடத் தக்கவை.

சமூகப் பணிகள் மட்டுமல்லாது சமயப் பணிகளிலும் திரு. சிவலிங்கம் அவர்கள் அதிக நம்பிக்கையும் ஈடுபாடும் உடையவர். கனடா இந்து ஆலய சபையை அமைத்த அறங்காவலருள் இவரும்

ஒருவர். அதில் தலைவர், உப தலைவர், பொருளாளர், செயலாளர் போன்ற பதவிகளைக் கடந்த காலங்களில் வகித்த சிறப்பும் இவருக்கு உண்டு. அத்துடன் இந்து சமயப் பேரவையின் காப்பாளர்களில் ஒருவராயும் உலகச் சைவப் பேரவையின் கனடாக் கிளையின் உப தலைவராகவும் ஒன்ராறியோவின் சைவ அமைப்புகளின் ஒன்றியத் தலைவராகவும் தொண்டாற்றி வருகின்றார். மருத்துவ பராமரிப்பில் சைவ சமய ஆதரவுச் சபை என்ற அமைப்பின் தோற்றத்துக்கும் இவர் முன்னின்று உழைத்திருக்கின்றார். அதன் இயக்குநர் சபையிலும் இருந்து அதனை வழிநடத்துகின்றார்.


இத்தகைய தன்னலமற்ற பணியாளரைப் பாராட்டிப் பல அமைப்புகள் அவ்வப்போது விருதுகள் வழங்கிச் சிறப்புச் செய்திருக்கின்றன. கனடா இந்து ஆலய சபை 2000ம் ஆண்டு யனவரியில் திரு. சிவலிங்கம் அவர்களின் சமயப் பணிகளைப் போற்றி 'அருட்பணி அருளாளர்' என்ற பட்டத்தைச் சூட்டிக் கௌரவித்தது. அத்துடன் தமிழர் தகவல், புனித ஹென்றியரசர் கல்லூரிப் பழைய மாணவர் சங்கம், கனடியத் தமிழ் இளைஞர் முன்னேற்றச் சங்கம், கனடா தமிழீழச் சங்கம், இந்து சமயப் பேரவை, ரொறன்ரோ ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேவஸ்தானம், உலக சைவ நெறிப் பேரவை, உதயன் பத்திரிகை ஆகியனவும் இவரின் சேவைகளை மதித்துச் சிறப்புகள் செய்திருக்கின்றன.

திரு. சிவலிங்கம் அவர்களின் துணைவியார் டாக்டர் சபாரத்தினம் தம்பதிகளின் மகள் ஜெகஜெனனி ஆவர். இவர்களது சிறப்பான இல்லற வாழ்க்கையில் அறிவறிந்த சிவாஜினி, ஹரினி ஆகிய பிள்ளைகளையும் கணதீபன், பிரியதர்சினி என்னும் பேரப் பிள்ளைகளையும் பெறும் பேறுடையவராயினர்.

இத்தகைய சைவப் பெரியார் 03.03.2010 அன்று இறைபதம் எய்திவிட்டார். இவரது இழப்பு ஈடுசெய்ய முடியாதது. அவரது பிரிவால் வருந்தும் அவரது மனைவி, பிள்ளைகள் மற்றும் உற்றார் உறவினருக்கு 'ஆத்மஜோதி' தனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறது.

# தமிழர் திருநாள் வாழ்த்து

முனைவர் சாந்தலிங்க இராமசாமி அடிகளார்
முதல்வர்: பேரூர் ஆதீனம், கோவை



சங்ககால வாழ்வியலைச் சார்ந்து புதுமைபல வளர
மங்கும் பொய்மைகொலை நெறிகள் மாய்த்துக் கொடுமைதமை நீக்கி
எங்கும் எதிலும் குறள்நெறியே ஏற்றுப்போற்றும் வளம்சுமந்து
பொங்கும் அன்பால் நேசித்துப்பொங்கல் நாளை வரவேற்போம்.

உலகம் போற்ற செம்மொழியின் உயர்வைக்கூறி நல்லறிஞர்
பலரும் இணைந்தே உலகத்தார்பற்றி நினைக்கத் தமிழரசு
நிலவும் சூழலால் எடுத்து நீடும் மைய அரசு ஏற்கக்
கலந்த புத்தாண்டினிய பொங்கல் கனிவாய் ஏற்போம் வாழ்த்துக்கள்.

ஏற்றத்தாழ்வு நிலை பலவும் எங்கும் எதிலும் சேர்நிலையை
மாற்ற அரசை வலியுறுத்தி வறுமை பிணிகள் அகன்றிடவே
சாற்றும் சான்றோர் நட்புறவு தழைத்துத் தெய்வத் தமிழதனால்
போற்றி மக்கள் நல்வாழ்வு பொங்கல் திருநாள் பொழியட்டும்.


வருங்காலத்து தலைமுறைகள் வளஞ்சேர் கல்வி அறநெறிகள்
பொருந்து தொழில்கள் பண்பாடு புகட்டும் பாடத்திட்டத்தின்
அருமைத் தமிழே முதலிடத்தில் அமையும் நிலையைப்பெற வேண்டும்.
உருகும் தமிழால் வழிபட்டு உயர வருக தைப்பொங்கல்!

# MIRACLE IN KUMBAKONAM,SOUTH INDIA

Cobra doing Archana for Siva Lingam

Kumbakonam: At the Siva Temple in Thepperumanallur, large numbers of devotees witnessed a miracle of a Cobra doing Archana for Siva Lingam with Vilvam leaves. In Thanjavoor district of Tamil Nadu, near Thirunageswaram, there is a Siva Temple at Thepperumanallur. Here Vedhanthanayagi [Sakthi] with Viswanathaswamy [Siva] are the main Deities. In this Temple, it has been customary to do archana with Rudhraksha only.

On January 15, just before Solar Eclipse, at about 10:30 AM Sivachariar Satish, priest of the Temple, noticed a Cobra lying on top of the Siva Linga. The snake slowly descended from there and went towards the Vilvam tree which is the Sthala Viruksham- Holy tree of the temple. It climbed the tree and picked a Vilvam leaf and came back and entered the Sannadhi.




# Ancient Hindu Temple discovered in Indonesia

Archaeologists in Indonesia have uncovered a 1,000-year-old temple that could shed light on the country's Hindu past.

The intricately carved statues and reliefs are some of the best preserved in Indonesia, but the dig is being conducted under tight security to protect the site from well-organised relic thieves.

The temple was found on the grounds of Yogyakarta's Islamic University as workers probed the ground to lay foundations for a new library, and they realised the earth beneath their feet was not stable.

Digging soon revealed an extraordinary find: three metres underground were still-standing temple walls. Heavy rains then exposed the top of a statue of the god Ganesha in pristine condition.




A few weeks into the excavation, archaeologists are declaring the temple and its rare and beautiful statues an important discovery that could provide insights into Indonesia's pre-Islamic culture.

The university wants to open the site to the public once the dig is complete. The library that was destined for the site will be redesigned to incorporate the Hindu temple.

# ஸ்ரீ அலர்மேல் மங்கை சமேத ஸ்ரீ கல்யாண வெங்கடேசப் பெருமாள் தேவஸ்தான கும்பாபிடேகம்

மியம்மார் (பர்மா)நாட்டின் வர்த்தகத் தலைநகராகிய யாங்கோன் மாநில மைய நகரிலிருந்து 10 கிலோமீட்டர் தொலைவில் உள்ள சின்னத் தமிழகம் என்று போற்றப்பெறும் திருக்கம்பை மாவட்டத்தில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ அலர்மேல் மங்கை சமேத ஸ்ரீகல்யாண வேங்கடேசப் பெருமாள் தேவஸ்தானத்தின் ஜீரணோத்தாரண அஷ்டபந்தன மஹா சம்ரோஷணம் (கும்பாபிஷேகம்) 27-1-2010 புதன்கிழமை காலை 9.30 மணிக்கு மிகச் சிறப்பாக நடைபெற்றது. மாலை திருத்தேர் உலாவும் நடைபெற்றது.. பல்லாயிரக் கணக்கான மக்கள் பக்தி உணர்வுடன் கலந்து கொண்டு மகிழ்ந்தனர்.



நாடு ஆங்கிலேயர் ஆட்சியில் இருந்த போது இரங்கூன் முனிசிபல் காண்டிராக்ட் தொழிலதிபர் திரு.வேங்கடசாமி நாயக்கர் 1904-ம் ஆண்டு தமிழக ஸ்தபதிகளைக் கொண்டு இக்கோயிலை எழுப்பிக் கும்பாபிடேகமும் நடத்தினார். சைவ - வைணவத் தலங்கள் நிறைந்து திருத்தேர்கள் உலாக் காண்பதால் இவ்வூரை திருக்கம்பை எனத் தமிழறிஞர் கி.வா.ஜ அவர்கள் தமது வருகையின் போது கவிபாடினார். மியம்மார் நாட்டின் மிகப்பெரிய தேவஸ்தானக் கும்பாபிடேகம் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

செய்தி: சோலை. தியாகராஜன்

# என்றுமுள பரம்பொருள் - என்றுமுள சைவம் என்றுமுள தமிழ்

பேரறிஞர் முருகவே பரமநாதன்

“ஒன்று பரம்பொருள். நாமதன் மக்கள், உலகு இன்பக்கேணி” என்பது பாரதி வாக்கு. இறையனுபவமும் அதன் விளைவும் ஊடகமும் இன்றி இறைதத்துவம் இல்லை. ஒரு சமுதாயத்தினது முதுகெலும்பு மொழியென்றால் அவர்களின் வதிவிடமும் தெய்வமும் இன்றி எச்சமூகமுமே இல்லை. மூவேந்தரின் மண்ணான சேர,சோழ பாண்டிய நாடுகளை மையமாய் எழுந்தது சிலப்பதிகாரம். அம்மண்ணின் சொந்தக்காரரின் மொழியை - தாய் மொழியைப் பற்றிப் பார காவியம் தந்தவன் கம்பன் - வதிவிடமக்களின் வாழ்வியலை எடுத்துப் பேசியது திருக்குறள். இம்மூன்றையும் வைத்துப் பாரதி ‘யாமறிந்த புலவரிலே கம்பனைப் போல் - வள்ளுவர்போல், இளங்கோவைப் போல் பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை’ என அடித்துச் சொன்னார். இ∴தே போன்று யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம் என்று பாடி வியந்தார். கம்பநாடன் அகத்தியரை என்றுமுள தென்தமிழை இயம்பி இசை கொண்டாரென முத்திரை பொறித்தார். இராமபிரான் வனவாசம் சென்றவேளை சுதீக்கணன் உபசரித்து அகத்தியமாமுனிவனின் ஆச்சிரமத்துக்கு அனுப்புகிறான். இப்புனித கட்டத்தைக் கம்பநாடன் வெகுநாகரிகமாகப் பாடியுள்ளான்:

நின்றவனை வந்த நெடியோன் அடி பணிந்தான்
அன்று அவனும் அன்பொடு தழீ இ அழுத கண்ணால்
நன்று வரவு என்று பல நல் உரை பகர்ந்தான்
என்றும் உளதென்தமிழ் இயம்பிஇசை கொண்டான்.

அகத்தியப்படலம் 162

இன்று உயர் தனிச் செம்மொழியான தமிழை ஒரு உயர்தனிச் செம்மொழியாகப் பாரத நாடு அங்கீகரித்துள்ளது. இத்தமிழை அகத்தியர் முருகப்பெருமானிடமே கற்றார். அதை அருணகிரியார் திருப்புகழிலே வடித்துள்ளார்:

முத்தமி ழடைவினை முற்படுகிரிதனில்
முற்பட எழுதிய முதல் வோனே

திருப்புகழ் 1 - (கைத்தல) (கிரி.பேரருமலை)

இத்தமிழுக்கு ஐவகை இலக்கணம் அமைந்திருக்கிறது முத்தமிழாய் விரிந்திருக்கிறது. உலக மொழிகளுள் ஒன்றான

இன்பத்தமிழ் புதுமையானது, புனிதமானது.

பொருப்பிலே பிறந்து தென்னன்
புகழிலே கிடந்து சங்கத்து
இருப்பிலே இருந்து வைகை
ஏட்டிலே தவழ்ந்த பேதை
நெருப்பிலே நின்று கற்றோர்
நினைவிலே நடந்து ஓர்ஏன
மரும்பிலே பயின்ற பாவை
மருங்கிலே வளர்கின்றாளே.

- பாரதம்

இ∴து பரம்பொருளோடு தொடர்பானது. எனவே இறைவனே தமிழ் தமிழே இறைவன் என்றாகிவிட்டது.

சலம்பூ வொடு தூபம் மறந்தறியேன்
தமிழோடு இசைபாடல் மறந்தறியேன். 4.1.6

வானவன்காண் வானவர்க்குமேலானான்காண்
வடமொழியும், தென்தமிழும் மறைகள் நான்கும்
ஆனவன்காண். 6:87-1

ஏரிநிறைந்தனைய செல்வன் கண்டாய்
இன்னடியார் தரு இன்பம் விளைவிப்பான் கண்டாய்
சூரியன் கண்டாய் தமிழன் கண்டாய் 6:23.5

மூல நோய் தீர்க்கும் முதல்வன் கண்டாய்
முத்தமிழும் நான்மறையும் ஆனான் கண்டாய் 6:23

ஆரியந் தமிழோடிசை யானவன்
கூரிய குணத்தார் குறிநின்றவன் 5:18.3

ஏழிசையாய் இசைப்பயனாய் உள்ள எம்பெருமான்
எங்கும் நிறைந்தவன் என்றுமுள பரம்பொருள்.
எங்கும் தொடர்ந்து எதிர்வழக்கிடவும் நின்றது எது?
எங்கணும் பெருவழக்காய்
யாதினும் வல்ல தொரு சித்து ஆகி இன்பமாய்
என்றைக்கும் உள்ளது எது?

-தாயுமானார்

திங்களொடு கங்கைமுடி சேர்த்தசிவன்நீயே
திரிபுரங்கள் நீறு படம் பார்த்தசிவன் நீயே
சங்கினொடு சக்கரம் கைதாங்கிய மால்நீயே
தசமுகனைப் போரில் உயிர் வாங்கிய மால்நீயே
நங்கைகலை மங்கைதவழ் நாவிலயன் நீயே
நாரணனார் உந்தி வருபூவிலயன் நீயே
எங்குமுள பரம் பொருளே என்றுமுள பொருளே
யானைமுகம் பொருளே வந்து ஏழை எனக்கு அருளே
- கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை

ஆதிமதமான சைவம் சிந்து நதிக்கரையிலே உருவாகிச் செழித்துக் கொழித்து வளர்ந்தது. இதுவே சைவசமயம். எனவே சைவம் சிவசம்பந்தமானது. சிவசம்பந்தம் உடையவர்கள் சைவசமயிகள். தெய்வம் சிவமே, சிவனருள் சமயம். சைவம் சிவத்தோடு சம்பந்தம் என்றான் சிற்றம்பல நாடிகள்

சைவம் சிவனுடன் சம்பந்தம் ஆவது
சைவம் தனை அறிந்தே சிவம் சாருதல்
சைவம் சிவம் தன்னைச் சாராமல் நீவுதல்
சைவம் சிவானந்தம் சாயுச்சியமே.

- திருமந்திரம் 1512

முதல் நிலை சைவம் என்பது சிவனுடன் பொருந்தி நிற்றலாகும். இரண்டாம் நிலை சிவதத்துவத்தை உணர்ந்தே அதில் விளங்கும்படியான சிவபெருமானுடன் விளங்குதல். மூன்றாம் நிலை -சமாதியிற் பொருந்தாமல் சிவம் தம்மிடம் ஒளிர்வதை உணர்ந்து கொண்டிருத்தல். இந்நிலையில் சிவத்துடன் பொருந்தி உலகை விட்டுச் சமாதியில் நிலைப்பட்டுச் சிவானந்தப் பேறடைவர். இதுவே சாயுச்சியம் பெற்றவர் நிலையாம்.

இத்துறையிலே தகுதி வாய்ந்த ஆசிரியர்களை, சமய ஆதீனங்களை நண்ணி மொழி, தத்துவம் போன்றவற்றை நன்கு படிமுறையாய் ஒழுக்காய்க் கற்று ஒரு மொழி ஆளுமை மிக்கவராய் சமயத் தகைமையுடையவராய் எம்மை மாற்றி உயிர்க்கு உறுதி தேடுதல் சைவசமயிகளான எம் தலையாய கடமையாம்.

புறச்சமய நெறி நின்றும், அகச்சமயம் புக்கும்
புகல் மிருதி வழியுழன்றும், புகலும் ஆச்சிரம

அறத்துறைகள் அவையடைந்தும், அருந்தவங்கள் புரிந்தும்
அருங்கலைகள் பல தெரிந்தும், ஆரணங்கள் படித்தும்
சிறப்புடைய புராணங்கள் உணர்ந்தும் வேதச்
சிரப் பொருளை மிகத் தெளிந்தும் சென்றால், சைவத்
திறத்தடைவர், இதில் சரியை கிரியா யோகம்
செலுத்தியபின் ஞானத்தால் சிவனடிய்யைச் சேர்வர்.

- அருணந்திசிவாசாரியர்

எல்லாச்சமய நெறிகளையும், தன்னகத்தே கொண்டு அவைகளைப் புகுமுகமாய்க் கொண்டு, அவைகளுடன் பிணங்காமல் இணங்கி, பாதரசத்தால் கரைந்து மறையும் மற்றைய லோகங்கள் போல் அன்றி, நின்று நிலைத்துத் தங்கும் பத்தரை மாற்றுத் தங்கம் போல தன் இயல்பு என்றும குறையாது, இயமம், முதலிய அட்டாங்க யோக நெறிகளைக் காட்டி இன்பத்தை அருளவல்லதும், மற்றைச் சமயங்கள் அனைத்தும் தனக்குப் பரிவாரமாக விளங்க, சிட்சை, வியாகரணம், சோதிடம், சந்தஸ், கற்பம் நிருத்தம் முதலிய வேதாங்கங்கள் வணங்க, மௌனம் என்ற மகுடத்தைச் சிரசில் தரித்து அரசுபுரிவது வைதீக சைவ சமயம் என உணர்க.

- விளக்கம் கிருபானந்த வாரியார் கந்தரநுபூதி.

இன்று நம் தாய்மொழியான தமிழும், தாய்ச்சமயமான சைவமும் நிலைகுலைந்து முன்னிருந்த கட்டுக்கோப்பினின்றும் நழுவி இருப்பதைக் கல்வி வல்லாரும், சைவ தமிழ்ச் சமயிகளும் நன்கு அறிவர்.

தமிழகத்தில் ஆங்கிலத்தமிழாய் மாறியமை வெளிப்படை. பேச்சிலும், எழுத்திலும் இந்நிலை அமையக் காண்கிறோம். இலங்கைத்தமிழினம் குடிபுகுந்த தேசஙகளிலே தமிழை ஒதுக்கியே விட்டனர். அவுத்திரேலியா, பிரித்தானியா அமெரிக்காவில் ஆங்கிலமும் - ஐரோப்பியநாடுகளில் அந்த அந்த நாட்டு மொழி களும் - ஈழதமிழர்களின் மொழியாகி விட்டமை வருந்தத்தக்கது.

அவ்வண்ணமே சிறந்த சிவவழிபாட்டையும் சைவத்தையும் கைவிட்டு புதிய பாதையில் நடக்கின்றனர். சைவத்தில் பரசமயங்களும் பரதெய்வங்களும் புகுந்துவிட்டன. திருவாசகம் சைவத்தையும் சிவனையும் பற்றிப் பேச அதை ஓதுவோர் வழி மாறிப் போகின்றனர்.

எனவே சைவத்தையும், தமிழையும் காக்க நாமெல்லாம் முயல்வோமாக.

# திருக்கேதீச்சரமும் மகாசிவராத்திரியும்

புலவர் சி. விசாலாட்சி அம்மையார் (மாதாஜி)

ஈழத்தில் பாடல்பெற்ற தலங்களில் திருக்கேதீச்சரமும் ஒன்றாகும். இதற்கு திருஞானசம்பந்தர் தேவாரமும், சுந்தரமூர்த்திநாயனார் தேவாரமும் சான்றுகளாக அமைந்துள்ளன. திருஞானசம்பந்தர் சுவாமிகள் காலம் கி.பி. 6ஆம் நூற்றாண்டாகும். சுந்தரமூர்த்தி சுவாமிகளின் காலம் கி.பி. 8ஆம் நூற்றாண்டாகும்.

திருக்கேதீச்சர ஆலயம் வேதகாலத்திற்கு முந்தியது என்பதை இராகு கேது வரலாறுகள் மூலம் அறியக் கிடக்கின்றது. மோட்சத்தையும் பேரின்பத்தையும் தருவது மண்ணுலகச் சிவவழிபாடாகும் என்பதனைத் திருவாதவூரடிகள் அருளிய "புவனியிற் போய்ப் பிறவாமையில் நாள் நாம் போக்குகின்றோம் அவமே" என்ற அடிகள் மூலம் அறியக் கிடக்கின்றது.

அசுரரும் அமரரும் தேவாமிர்தம் எடுப்பதற்காகத் திருப்பாற்கடலைக் கடைந்த காலம் வேதகாலம். வேதகாலம் என்பது தேவர்காலம். அதற்கு முன்பே ஈழத்து மன்னார் மாவட்ட மாந்தையில் திருக்கேதீச்சரம் அமைக்கப்பட்டது என்பதை ராகு கேது தவமிருந்து சாபவிமோசனம் பெற்ற வரலாறு வலியுறுத்து கின்றது. அக்காலந் தொடக்கம் புனித தலமாகவும் சாபவிமோசனம் நீக்குமிடமாகவும் கிரகபீடை நீக்கும் தலதீர்த்தமாகிய பாலாவி காணப்பட்டதெனலாம். இதிலிருந்து திருக்கேதீச்சரம் தோற்றப்பட்ட காலந்தொடக்கம் மகாசிவராத்திரி தினம் விசேடமாக அனுட்டிக்கப்பட்டது.

திருக்கேதீச்சரம் இராவணன் காலத்திலும் சோழர்காலத்திலும் வழிபாட்டுத்தலமாக இருந்தது. இராவணனின் ஆட்சிப் பீடக் காலத்தில் மாந்தை தலைநகரமாக இருந்தது. வீணைக்கொடி பறந்தது. திருக்கேதீச்சரமும் பல வீதிகள் கோபுரங்கள் உடைய மூர்த்தி, தலம், தீர்த்தம் உடையதாக இருந்தது.

சோழர் காலத்தில் மாந்தை புகழ்பெற்ற தலமாகக் காணப்பட்டது. புலிக்கொடி பறந்தது. கடல் கடந்து அராபியர் போன்ற வணிகர்கள் முத்து, நெல், இரத்தினம், நெடுந்தீவுக் குதிரைகள் பெறுவதற்காக வந்தனர். இதனால் மாந்தை இந்தியாவின் திருப்பெருந்துறையோ என்று கணிக்கும்படி மாந்தைத் துறைமுகம் காணப்பட்டது.

காலங்கள் உருண்டோடின. அந்நியரின் வருகை ஏலம், கறுவா, மிளகு, கராம்பு முதலிய வாசனைச் சரக்குக்காக

வந்தவர்கள், இலங்கையின் எழிலும் வருமானத்திலும் மயங்கி இலங்கையைத் தம் ஆட்சிக்குட்படுத்திய காலத்தில் 17ஆம், 18ஆம் நூற்றாண்டளவில் சைவசமய ஆலயங்கள் முற்றாக அழிக்கும்போது திருக்கேதீச்சரமும் முற்றாக அழிக்கப்பட்டது.

ஈழத்தின் சைவத்தமிழர் செய்த மாதவம் மீண்டும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர், தவத்திரு சிவயோக சுவாமிகள் ஆகியோரின் ஆசியும், வாழ்த்தும் 1954களில் ஆலயப் புனருதாரணம் செய்யப்பட்டது. மகாசிவராத்திரி தினமும் சிறப்பாக அனுட்டிக்கப்பட்டது.

1974 களின் பின் திருக்கேதீச்சர ஆலயப் பொலிவு மகோன்னதமாகக் காணப்பட்டது. சிவபெருமான் ஞானகுருவாக வந்து வாதவூரடிகளை தடுத்தாட்கொண்டு ஞான உபதேசம் அளித்த திருப்பெருந்துறைக் காட்சி போன்று திருக்கேதீச்சரம் காணப்பட்டது. சுந்தரமூர்த்தி நாயனார், திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் திருக்தேீச்சரப் பதிகத்தில் பாடிய செய்திகளின் பிரதிபலிப்பின் ஒரு சில காணப்பட்டன. எம்பெருமானின் ஆனந்தத் தாண்டவ காட்சி, ஆலயச் சூழ்நிலைக்காட்சி, அலைகடலின் ஓசையின் காட்சி, ஆலய மகோற்சவ காட்சி, சிவராத்திரி, திருவெம்பாக் காட்சிகளை வர்ணிக்க வர்ணிக்க பக்திநதி பாலாவியுடன் மயங்கி எம்பெருமானின் மகாலிங்கம் மீது பல்லாயிரக்கணக்கான குடநீராகச் சொரிந்து கொண்டே இருக்கும். மயில்கள் ஆட, மந்தி முழவு கொட்ட, மான்கள் துள்ள பசுக்களின் முலைகள் தாமாக பால்தரையிற் சொரிய மாங்கனியின் சாறும் தேனும் மயங்க பக்த கோடிமக்கள் ஆனந்தக் கண்ணீர் சொரிய எப்படி வர்ணிப்பது.

சிவராத்திரி சிவனுக்குரியது. மாசிமாத அமாவாசைத் தினத்தன்று பஞ்சாட்சரமாகிய திருவைந்தெழுத்தோதி ஆகம ஆசாரத்துடன் திருக்கேதீச்சரத்தில் கண்விழிக்க இலங்கையின் மூலைமுடுக்குகளில் உள்ள மக்கள் ஒன்றுகூடுவர். நாடும் வீடும் சிறக்க சைவம் தழைக்க சிவராத்திரித் தினம் திருக்தேீச்சரம் சிவலோகத்தைவிட விஞ்சிக் காணப்படும்.

திருக்கேதீச்சர நிலை நேர்நோக்கியோரின் நிலை, கண்ணப்பநாயனார் எம்பெருமானின் கண்ணில் குருதி பாய்ந்த காலத்தில் கண்ணப்பர் பட்ட மீளாத்துயரை விட விஞ்சியதாகும். திருக்கேதீச்சர ஆலயத்தில் வீழ்ந்து மண்ணிலே புரண்டு கோவென்று அழவேண்டும் என்ற நிலையேயாகும். மணிவாசகப் பெருமான், சிவபெருமான் கூலியாளாய் வந்து மண்சுமந்து அடிபட்டபோது வைகையாற்றங்கரையில் கண்ணீர் பெருக வீழ்ந்து புரண்டழுத நிலைதான் நினைவு வருகின்றது. சுற்றவர இருந்த மடங்களில்லை,

பசுக்கூட்டம், மயில்கூட்டம், மான்கூட்டம், குடிமனை நெருக்கம் ஏதுமின்றி எம்பெருமானின் கோபுரம் வானத்தையும் கடலலையையும் நோக்க 2002ஆம் ஆண்டு சிவராத்திரி விழா நடந்தது. சனக்கூட்ட நெருசல் கடைகள் அதிகம் அதிகம். ஆனால் எம்பெருமானுக்கு, சிவலிங்கத்திற்கு அபிடேகம் முதலியன இல்லை. இனி வருங்காலம் மீண்டும் திருக்கேதீச்சர சிவராத்திரி விழா கண்விழிப்பு புத்துயிர் புதுப்பொலிவுகாண இலங்கை வாழ் சைவத்தமிழர் மனப் பூர்வமான ஒத்துழைப்பும், முக்கரண சுத்தியுடைய விசுவாசமான பக்தி வெள்ளம் பாயும் தவமும் கைகூட வேண்டும். ஆன்மீகம் ஆலயத்தை வளர்க்கட்டும்.

குறிப்பு: இக்கட்டுரை 2002ல் எழுதப்பெற்றது. இன்று திருக்கேதீச்சரம் அரசாங்கத்தால் புனித தலமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

## Thiruketheeswaram, Sri Lanka

Thiruketheeswaram, an ancient temple in Manthottarmam, in Mannar District,is about seven miles north of the Mannar Town. According to legend, it was at this ancient temple that Kethu Bhagavan worshipped Lord Easwaram (Shiva). Hence the shrine acquired the name of Thiruthieswaram. Iravana's father-in-law Mayan built the temple at Thiruketheeswaram north of Mannar. This temple dedicated to the worship of the God Siva has been most venerated for centuries and the holy waters of the Palavi Tank by its side are venerated in the sacred hymns of two great Saivite Saints, Thirugnana Sambandhar and Sundarar. This is one of the five main kovils scattered around the country dedicated to God Siva.

Sri Lanka President Mahinda Rajapaksha has declared Thiruketheeswaram as a Sacred City for Hindus.This was the first time that an area where an old Hindu Temple is located has been declared a sacred city in Sri Lanka.

Earlier this month, Hindus met Basil Rajapaksha, Senior Advisor to President Mahinda Rajapaksha and the Chairman of the Presidental Task Force for Northern Development and brought to his notice the desolate condition of one of the oldest historical Hindu Temples, Thiruketheeswaram. Subsequently he visited the Thiruketheeswaram Temple and saw for himself the plight of the temple, allocating Rs500million (US$4.3 million) for its restoration.

# இந்துசமயப் பேரவைச் செய்திகள்

## திருவாசகவிழா



22-12-2009 தொடக்கம் 31-12-2009 வரை நடைபெற்ற திருவெம்பாவை காலத்தில் பேரவையின் திருக்கூட்டத்தினர் மேருபுரம் பத்திரகாளி அம்பாள் ஆலயத்தில் திருவாசகம் முற்றோதினர். ஆருத்ரா தரிசன விழாவை திருக்கூட்டத்தினரின் உபயமாக வெகுசிறப்பாகக் கொண்டாடினர். இந்நிகழ்ச்சியை முன்னிட்டு 2-1-2010 சனிக்கிழமை திருவாசகவிழா மேற்படி ஆலயத்தில் வெகுசிறப்பாக நடத்தப்பட்டது.

மேற்படி விழாவிற்கு பேரவையின் தலைவர் வி. கந்தவனம் அவர்கள் தலைமை தாங்கினார். மாவை செ. நவரத்தினம் சட்டத்தரணி க. ஜெயநிதி, சு. சிவதாஸ் ஆசிரியர் பேரவையின் உறுப்பினர் திருமதி இராசமலர் சின்னராசா, பேரவையின் பொருளாளர் செ. சோமசுந்தரம் ஆகியோர் சிறப்புரையாற்றினர். செயலாளர் சிவமுத்துலிங்கத்தின் நன்றியுரையுடன் கூட்டம் இனிது நிறைவேறியது.

## திருப்புகழ் பூர்த்தி வைபவம்



ஜனவரி, பெப்பிரவரி மாதங்களில் பிரதி சனிக்கிழமைகளில் அருணகிரிநாதர் பாடல்கள் (திருப்புகழ்) முற்றோதப்பட்டு 06-02-2010 சனிக்கிழமை மேருபுரம் மகாபத்திரகாளி அம்பாள் ஆலயத்தில் பரிவார மூர்த்தியாக வீற்றிருக்கும் வள்ளி தெய்வஞானை சமேத முருகப்பெருமானுக்கு அபிசேக ஆராதனைகள் பேரவையின் திருக்கூட்டத்தினரால் நடத்தப்பட்டன.

## குடைச்சுவாமியின் (கந்தையா சுவாமிகள்) குருபூசை



20-02-2010 சனிக்கிழமை குடைச்சுவாமியின் குருபூசை திருக்கூட்டத்தினரால் திருவாசகம் முற்றோதி வெகுசிறப்பாக நடத்தப்பட்டது. சிவபெருமானுக்கு விசேட அபிசேக ஆராதனையும் விசேட அன்னதானமும் (மகேஸ்வரபூசையும்) இடம்பெற்றன. பேரவையின் திருக்கூட்டத்தினருடன் குடைச்சுவாமியின் பக்தர்களும்

கலந்து கொண்டு சுவாமியின் அனுக்கிரகத்தைப் பெற்றனர்.

## நடேசர் அபிசேகம்



27-02-2010 சனிக்கிழமை மாசி மகத்தன்று நடேசர் அபிசேகத் திருநாளாகும். அன்றைய தினம் பத்திரகாளி அம்பாள் ஆலயத்தில் வீற்றிருக்கும் முன்னைநாதர் பெருமானுக்கும் நடராசருக்கும் விசேட அபிசேக ஆராதனை பேரவையின் திருக்கூட்டத்தினரால் நடத்தப்பட்டது.

## தாயுமானவர் முற்றோதல்

பேரவையின் திருக்கூட்டத்தினரால் தாயுமானவர் பாடல் பக்தி சிரத்தையோடு முற்றோதல் செய்யப்பட்டு 28-02-2010 ஞாயிற்றுக்கிழமை பூர்த்தி செய்யப்பட்டது.

## ஆதிசிவன் ஆலயத்தில் திருவாசகம் முற்றோதல்

மாதந்தோறும் இரண்டாவது வாரத்தில் வரும் வெள்ளிக்கிழமை களில் பேரவையின் திருக்கூட்டத்தினரால் திருவாசகம் முற்றோதப்பட்டு வருகின்றது.



# சிவதொண்டன் நிலையம் செல்லத்துரை சுவாமிகள் தரிசனம்

(சு. சிவதாஸ், ஸ்ரான்லி கல்லூரி)



பக்தரினம் சேரென்றான் எங்கள் குருநாதன் என்ற யாழ்ப்பாணத்து சிவயோக சுவாமிகள் வாக்குப்படி, நாம் எப்பொழுதும் பக்தர்களை, ஞானிகளை, யோகிகளை சென்று தரிசித்து, பரிசித்து, சம்பாஷித்து எம்மைப் புனிதப்படுத்திக் கொள்ள வேண்டும்.

நான் இளைஞனாக இருக்கும் காலத்து, யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை சிவதொண்டன் நிலையத்தில் திருவடி பூசை செய்யும் அன்பரொருவருடன் சிவதொண்டன் நிலையத்துக்குச் சென்றேன். அந்த அன்பரே ஆச்சரியப்படும் அளவுக்கு, நாம் உட்சென்றபோது, செல்லத்துரை சுவாமிகள் வெளித்திண்ணையிலே, யோகத்திலே அமர்திருந்தார்கள். தூரத்தே கண்டவுடன் என்னை அழைத்துச் சென்ற அன்பர், தமது வாயிலே விரலை வைத்து என்னை மௌனமாகும்படி அறிவுறுத்தி எனது காதுக்குள்ளே, செல்லத்துரை சுவாமி வந்திருக்கிறார் என்றார். மட்டக்களப்பு செங்கலடி சிவதொண்டன் நிலையத்திலே கூடுதலான நாட்களை கழிக்கும் சுவாமிகள் இடையிடையே யாழ்ப்பாணமும் வந்து நிருவாக முறைகளைச் சீர்செய்து மீளவும் செங்கலடி செல்வது வழக்கமாயிருந்தது. இவர்தான் செல்லத்துரை சுவாமிகள் என்று அன்பர் சொல்லக்கேட்டதுமே கையெடுத்து வணங்கினேன். உடனே கண்விழித்து, அந்த அன்பரை பார்த்து, இந்தப் பெடியனுக்கு ஒரு தேநீர் போட்டுக்கொடு என்று திருவாய் மலர்ந்தார். மலர்ந்தவர் மீண்டும் யோகத்தில் அமர்ந்து கொண்டார். அந்த நாட்களில் அவர் வெள்ளை ஆடைகளையே அணிபவராக இருந்தார். நாலு முள வேட்டியுடன் அழகான தாடியும் வைத்து அரைக்கண் திறந்தபடி யோகத்தில் அமர்ந்த சுவாமிகளைக் கண்டுகொண்டு அன்பருடன் சென்று அன்பர் செய்யும் பணிகளை அவதானித்துக் கொண்டு இருந்தேன். சுவாமியார் சொன்ன காரணத்திற்காக அவசரமாக தேநீர் வைத்து, எனக்கும் தந்து சுவாமிகளுக்கும் கொடுத்தார் அந்த அன்பர். அந்த அன்பர்தான் நித்தமும் சிவதொண்டன் நிலையத்தில் தங்கியிருந்து திருவடி பூசை செய்து வந்த ஆசிரியர் திருவாளர் தம்பாப்பிள்ளை என்பவராவர். பண்ணிசையோடு தேவாரங்கள் பாடவல்லவர்.

செல்லத்துரை சுவாமிகள் யோகத்தில் இருந்தபடியால், அவரை யான் தொட்டு வணங்கவில்லை. உரையாடவும் இல்லை. ஆனால், தேநீர் வைத்துக் கொடு என்று இலகுவில் அவர் சொல்லமாட்டார் என்றும் அது ஒரு பெரிய வரப்பிரசாதம் என்றும் செல்லத்துரை சுவாமியோடு மிகவும் நெருக்கமாகப் பழகிய ரொறன்ரோவில் வதியும் சரவணமுத்து ஐயா எனக்குக் கூறினார். யோகர்சுவாமிகளின் சீடர்வரிசையிலே மார்க்கண்டு சுவாமிகள் போன்றே செல்லத்துரை சுவாமிகளும் விளங்கினாரென்பர்.

பாடசாலை ஆசிரியராய், அதிபராய் இருந்த செல்லத்துரை சுவாமிகள் வருடம் தோறும் தவணை விடுமுறை நாட்களில் இந்திய யாத்திரை செய்வது வழக்கமாயிருந்தது. பகவான் ரமண மகரிஷியைச் சென்று தரிசித்து வழிபடும் சுவாமிகள், ஒருமுறை திருக்கேதாரத்தில் தங்கியிருக்கையில் அவர் உறைந்த அறையிலே சிவயோகசுவாமிகள் பிரத்தியட்சமாகத் தோன்றி Come alone immediatly (உடனடியாக ஊருக்கு வந்துசேர்) என்று ஆங்கிலத்தில் கூறிவிட்டு மறைந்துவிட்டார். உடனடியாக செல்லத்துரை சுவாமிகள் புறப்பட்டு இலங்கை வந்துசேர, நாவற்குழி பாடசாலைக்கு மாற்றலாகும்படி அரசாங்கத்திடமிருந்து கடிதம் ஒன்று வந்திருந்தது. யோகர்சுவாமிகள் தோன்றிய திகதியிலேயே இக்கடிதம் கையொப்பமிடப்பட்டிருந்தது. சுவாமிகள் சரசாலையைச் சேர்ந்தவர். அடுத்தநாள் யோகர்சுவாமிகளைச் சென்று தரிசித்தார். அதனைத் தொடர்ந்து யோகர்சுவாமிகள் இவரையே சிவதொண்டன் நிலையத்துப் பொறுப்பாளராக நியமித்தார்.

செல்லத்துரை சுவாமிகளே சிவதொண்டன் ஏட்டுக்கு ஆசிரியராகவும் அமர்ததப்பட்டார். 1956-2006 வரையான 50 வருடங்களாக யோகர்சுவாமிகளின் பாதையிலே நின்று சிவதொண்டு செய்தார். ‘சிவசிந்தனை’ ‘யோகர்சுவாமிகள் வாழ்க்கையும் - வழிகாட்டுதலும்’ நூல்களின் ஆசிரியராகவும் அமைந்தார். யோகர்சுவாமிகள் அருளிச்செய்த நற்சிந்தனைப் பாடல்களின் இலக்கணமாகத் திகழ்ந்தார். ரமண மகரிஷியின் போதனைகளும் யோகர்சுவாமிகளின் போதனைகளும் ஒன்றே என்பதை இவரது நூல்களிலே தெளிவாகக் காட்டியிருக்கிறார். சுவாமிகள் அவ்வப்போது தமக்கும் அடியவர்க்கும் அருளிய வாக்குகளை மிகத் தெளிவான முறையில் வியாக்கியானம் செய்து, தமது நூல்களை வாசிப்போரது உள்ளத்திலே மிகவும் ஆழமான ஆன்மீகப் பதிவுகளை ஏற்படுத்தினார்.

பின்னடிக் காலங்களிலே யாழ்ப்பாணம் சிவதொண்டன் நிலையத்திலே மிகவும் சுறுசுறுப்பாக இருந்து கடமையாற்றி, குருவடிக் கலப்புறுவதற்கு 3 மாத காலத்தின் முன்பே தான் யோகர்சுவாமிகளின் 42வது மகாசமாதி ஆயிலிய வழிபாட்டின் பின்னர் தமது உடலை உகுத்துவிடுவேன் என்று கூறியபடி 2006ஆம் ஆண்டு ஏப்ரல் 7ஆம்திகதி வந்த மகாஆயிலியப் பூசையைத் தொடர்ந்து வந்த பங்குனி உத்தரத்திலே (ஏப்ரல் 13ஆம்திகதி) குருவடிவுடன் ஒன்றித்தார்.

செல்லப்பா சுவாமிகள் அருளிய 4 மகாவாக்கியங்களையும் அடிப்படையாக வைத்தே சற்குரு சிவயோகசுவாமிகள் நற்சிந்தனைப் பாடல்களை அமைத்தார். அந்த மகாவாக்கியங்களை மிகவும் விளக்கமான முறையில் செல்லத்துரை சுவாமிகள் விரிவுபடுத்தி, தெளிவுபடுத்தி தமது 'யோகர்சுவாமிகள் வாழ்க்கையும் வழிகாட்டுதலும்' என்ற நூலிலே தந்திருக்கின்றார். இது யோகர்சுவாமிகளின் பக்தர்களுக்கு ஒரு பெருவிருந்தாக அமைந்திருக்கின்றது எனலாம்.


# P. KAYILASANATHAN

**B.A.(Cey.) LL.B(Cey)**

Barrister & Solicitor

**உங்கள் தேவைகளுக்கு குறிப்பாக......**



குற்றவியல் வழக்குகள்
குடிவரவு, அகதிநிலை விண்ணப்ப விசாரணைகள்
மேன்முறையீடுகள்
மனிதாபிமான அடிப்படை விண்ணப்பம்
ஸ்பொன்சர் சம்பந்தமான சகல விடயங்களும்
வீடு, வியாபார ஸ்தாபனங்கள் வாங்குதல் விற்றல்
குடும்ப விவகாரம்
வாணிபச் சட்டங்கள் சம்பந்தமான சகல விடயங்கள்

**2401 Eglinton Ave. East, Suite 302**
**Scarborough, ON. M1K 2M5**
**Tel: 416-752-9561**
**Fax: 416-752-7262**

# 160,000 Have Converted Out of Hinduism in Malaysia in 25 Years

According to estimates compiled by a respected Hindu organization, about 130,000 Malaysian Hindus have converted to Christianity and another 30,000 to Islam. While it is not possible to relate it to any time period, it is probable that it refers to the period from 1965-90. Considering that the Hindu population in the country is about 1.1 million, the figure of 160,000 converts is 6,400/year or half a percent a year.

The same reliable sources say that of the 130,000 Hindu converts to Christianity, about 97,000 joined the Methodist Church and 33,000 joined various protestant churches such as the Anglicans, Seventh Day Adventists, Lutherans, Assembly of God, Pentecosts and the Jehovah's Witnesses. Converts to the Catholic Church are few, estimated to be about 100 converts each year, mostly through marriage to a Catholic.

By far the largest motivating factor for conversions to the Tamil Methodist Church is the strong missionary work. Christian propagation methods and its effects are well known to most Hindus: free Sunday classes for children, house to house visitations, healing sessions by visiting preachers, social service in neglected areas like the squatter and slum areas, exploitation of the emotional and gullible Hindus during their weak moments and partly the social acceptability of becoming a Christian. The rural Hindus find this appealing as they are unable to socialize with their urban, educated and caste-conscious Hindu brethren. Most conversions to the Methodist Church are due to the missionary work of that church. Rarely is it due to marriage to a Methodist.

Conversions to the Catholic Church are primarily due to marriage to a Catholic. The Catholics insist that any person who marries one of their flock must become a Catholic. The moment a marriage seems imminent, the pastor begins work with visits and invitations to the church masses and youth programs. While sometimes they tolerate a Hindu wedding to

be followed by a church wedding, the children of that marriage are exclusively brought up as Catholics.

As for Islam, it is national law that a nonMuslim must convert first to Islam before marrying a Muslim. Most conversions to Islam are motivated by a Hindu's marriage to a Muslim girl. Apart from Islamic influence in schools and universities, and the peer pressure there and in workplaces, there is almost no missionary effort by the Muslims in the country to convert Hindus.

Mr. A. Subramaniam, president of the Malaysia Hindu Sangam, says that, "the greatest threat to the Hindus comes from the Tamil Methodists who train their members in the Tamil language and are therefore able to take advantage of it with freely available literature."

The Sangam plans to hold a national seminar around March 1992 to drive home to the Hindu public "the extent and true dimensions of this conversion problem." Mr. Subramaniam says that while Hindus are somewhat aware, they are not aware of the extent as well as the serious repercussions of it.

But there has been a trickle of these Hindu converts to Christianity back to the Hindu fold. The sangam holds orientation interviews counselling these would-be reconverts. While there is a formal ceremony for entrance to Hinduism called the Vratyastoma Samskara, the Sangam suggests a simple ceremony for these reconverts. It consists of a bath,' followed by the application of vibhuti or tilak on the forehead and the repetition of the "Om Namasivaya" three times.

- Hinduism Today

## அமரத்துவச் செய்தி




சைவப் பெரியார் திரு. சதாசிவம் சேவியர் அவர்கள் 13-03-2010 தமிழகத்தில் அமரத்துவமானார். 15க்கு மேற்பட்ட நூல்களை எழுதிய சிந்தனையாளர். பேரவையின் வளர்ச்சிக்கு தார்மீக ஆதரவுகளைத் தருபவர். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பேரவை பிரார்த்திக்கின்றது.

# ஒன்ராறியோ இந்துசமயப் பேரவையின் 10ஆம் ஆண்டு திருமுறை விழா 2009

- புதுவை இராமன்

உலகில் உள்ள அனைத்து தமிழர்களின் சைவ சமய நம்பிக்கைகள் யாவும் இறை நம்பிக்கைகளுக்கு அடித்தளமாய் அமைந்திருப்பதால் தமிழர்களின் கலாச்சாரம் என்பது உலகளவில் பிரசித்தமாயிருக்கிறது. அதற்குச் சான்றாக உலகெங்கும் சைவ சமய ஆன்மீகம் சார்ந்த பல்வேறு அமைப்புகளை உருவாக்கி தமிழையும், சைவ சமயத்தையும் காப்பாற்றித் தமிழனத்திற்கு பெருமை பெற வைத்துள்ளார்கள். அந்த வகையில ஆத்மஜோதி திரு முத்தையா அவர்களால் 15 ஆண்டுகளுக்கு முன்பு உருவாக்கப்பட்டதே ஒன்ராறியோ இந்து சமயப் பேரவை எனும் அமைப்பாகும். சைவசமய சித்தாந்தக் கொள்கைளின் வளர்ச்சிப் பணிகளாக 150க்கும் அதிகமான சமய அபிமானிகளை ஆயுள் உறுப்பினர்களாகக் கொண்டு, பேரவையின் திருக்கூட்டத்தினரால ஒவ்வொரு வாரமும் திருப்புகழ், திருமந்திரம், திருவாசகம் பன்னிரு திருமுறைகளை முற்றோதல் எனத் தொடர்ந்து நடத்தி வருவதோடு, எண்ணற்ற நூல்களையும், 'ஆத்மஜோதி' எனும் காலாண்டு சஞ்சிகையும் வெளியிட்டும், சற்சங்கம் மூலம் ஆத்மீக



*23-01-2010 சனிக்கிழமை நடைபெற்ற திருமுறை விழாவை குத்து விளக்கேற்றி ஆரம்பித்து வைக்கும் பொழுது.*

சந்தேகங்களைப் போக்கியும், பல்வேறு குருபூஜைகளை நடத்தியும் வருகிறார்கள்.

வருடா வருடம் திருமுறை விழாவையும், திருமுறை மாநாட்டையும் இங்குள்ள இளைய சமுதாயமும் இத்தகைய பணிகளில் ஈடுபடும் வகையில் பல்வேறு போட்டிகளை நடத்தி, தங்கப் பதக்கம், நினைவுக்கேடயம், ஆன்மீக இலக்கிய நூல்கள் மற்றும் பாராட்டுச் சான்றிதழ் ஆகியவற்றை வழங்கி கௌரவித்துச் தமிழையும், சைவ சமயத்தையும் வளர்த்து வருகிறார்கள்.



***நடன ஆசிரியை மாலினி பரராசசிங்கம் அவர்களின் நெறியாள் கையில் முதியோர்களின் சுளகு நடனம் நடைபெறும் பொழுது.***

இப்பேரவையின் 10வது ஆண்டு திருமுறை விழா இரு நாட்களுக்கு நடைபெற ஒழுங்கு செய்து, கடந்த 23.1.2010 சனிக்கிழமை பிற்பகல் 2.00 மணி அளவில் அதன் தலைவர், சைவதுரந்தரர் கவிஞர் கந்தவனம் அவர்கள் தலைமையில் மிகவும் சிறப்பாக முதல் நாள் விழாவினை தொடங்கியது. விழா மேருபுரம் பத்திரகாளி அம்மன் ஆலயத்தில் நடந்தது. ஆலயத்தில் கூடியிருந்த 150க்கும் அதிகமான அடியார்கள், விழாப் பிரமுகர்கள், மற்றும் பார்வையாளர்கள் அனைவரையும் இன்புற வைத்துவிட்டது.


இவ்வாண்டு நிகழ்ச்சிகள் அனைத்துமே கர்ச்சிதமாய் ஒழுங்கு செய்யப்பட்ட விதத்தில், தொடக்க விழாவில் இப்பேரவையின் திருக்கூட்ட உறுப்பினர்களான ஆண்களும், பெண்களும் தலையில் திருமுறை நூல்களை ஏந்தியபடி, சேக்கிழாராக திரு அருணகிரிநாதர்



***திருக்கூட்ட அடியார் சு. அருணகிரிநாதர் சேக்கிழாராக உருவகப்படுத்தி பன்னிரு திருமுறைகளை சுமந்து வீதிவலம் வரும்பொழுது.***

உருவகப்படுத்தப்பட்டு திருமுறைகளை ஏந்தி வந்தார். அவர்கள் தேவாரம் திருவாசகப் பாடல்களைப் பாடியவாறே ஆலயத்தின் உட்புற வீதியைச் சுற்றி வந்ததிற்குப் பின், ஆலய பிரதான சிவாச்சாரியரான சிவஸ்ரீ பாலசுப்ரமணியம் அவர்கள், கலையரங்க மேடைக்கு அருகில் இருந்த குருபீட திருஉருவப் படங்களிற்கு தீபம் காட்டி, நல் ஆசி வழங்கியதற்குப் பின் விழா நிகழ்ச்சிகள் ஆரம்பமாயின..

அன்றைய விழாவில் கலந்துகொண்டு உரையாற்றிய முக்கியச் சான்றோர்களான மகாஜனக்கல்லூரி முன்னாள் அதிபர் பொ.கனகசபாபதி, அருணகிரிநாதர், அன்று வெளியிடப்படும் Saiva Saints எனும் ஆங்கில நூலின் ஆசிரியர் திரு குமார் புனிதவேல், கலாநிதி நா. சுப்ரமணியம் மற்றும் இவ்வைபவத்திற்கு வந்திருந்த டாக்டர் லம்போததரன், இலங்கை பாராளுமன்ற முன்நாள் உறுப்பினர் திரு ஈழவேந்தன் மற்றும் இந்தியாவிலிருந்து வருகை புரிந்துள்ள மதுரை காமராஜ் பல்கலைக்கழகப் தமிழ்த் துறைப் பேராசிரியர் திரு கரு.முத்தையா ஆகியோரை விழாத் தலைவர் கவிஞர் கந்தவனம் அவர்கள் சபையோருக்கு அறிமுகப்படுத்தி அனைத்து நிகழ்ச்சிகளையும் தொகுத்து வழங்கிச் சிறப்பித்தார்.



**முருகன் புத்தகசால்ல அதிபர் தார்மீகவள்ளல் திரு. க. மகேசன் அவர்கள் திருமுறை மனனப் போட்டியில் பங்குபற்றிய பிள்ளைகளுக்கு பரிசில்கள் வழங்கும்பொழுது.**

திரு செ. சோமசுந்தரம் அவர்கள் அனைவரையும் வரவேற்று உரையாற்றியதற்குப்பின் சைவப்பெரியார் திரு நா. சிவலிங்கம் அவர்கள் இந்து சமயப் பேரவை ஆற்றி வரும் சைவ சமயப் பணிகளையும், குறிப்பாக இந்தியாவிற்குச் சென்று பல புண்ணிய சேத்திரங்களைத் தரிசித்து முற்றோதலை மேற்கொண்டதை வெகுவாகப் பாராட்டி, அதன் பணிகள் இறைவன் அருளால் மென்மேலும் சிறப்புற அமைய இறைவனைப் பிரார்த்தித்து தனது வாழ்த்துக்களைக் கூறிச் சிறப்பித்தார். அதனைத் தொடர்ந்து காமராஜர் பல்கலைகழகப் பேராசிரியர் திரு கரு முத்தையா அவர்களை தலைவர் அவர்கள் அறிமுகப்படுத்தியதற்குப் பின், திரு முத்தையா அவர்கள் தனது வாழத்துரையில், தமிழ்நாட்டை விட தமிழையும், தமிழர்களின் சைவ சமய மரபுகளைப் போற்றி வளர்த்து வரும் இலங்கைத் தமிழர்களின் ஈடுபாட்டினையும் கண்டு மிகுந்த ஆர்வம் கொள்பவர் என்ற வகையில் இப்பேரவை ஆற்றி வரும் சைவ சமயப் பணிகளை வெகுவாகப் பாராட்டி, குறிப்பாக இளைய தலைமுறையினரை ஈடுபடுத்தி வருவது மிகவும் போற்றுதலுக்குரியது என்றார். மனதிற்கு நிம்மதி தந்து வாழ்விற்கு வளம் சேர்க்கும் சேவையாக கடந்த 10 ஆண்டுகளாய் முற்றோதலை செயல்படுத்தி வருவதை அறிந்து இந்த மாநாட்டில் பங்கு பெறும் வாய்ப்பு கிடைத்தற்கு நன்றி பாராட்டியும், அன்று வெளியிடப்படும்

நூல்களை அனைவரும் வாங்கி படித்து பயன் பெற வேண்டும் என்று தனது உரையை நிறைவு செய்தார். அவரது உரையினைப் பாராட்டிப் பேசிய தலைவர் திருமுறைகளை ஓதுவதால் கிடைக்கும் நறபலன்களை, நெய்வேலியில், நிலக்கரியை வெட்டி எடுத்து தொழில் புரிந்த ஒரு பெரியவர் அன்றாடம் திருமுறைகளை ஓதிய பின்னர் தான் தனது பணிகளை மேற்கொண்டு வந்தததையும், அவரைப் பின்பற்றி அவரது மகனும் அதே மாதிரி ஈடுபட்டும், அதனால் தனக்கு ஏதும் பயன் பெற வில்லை என்பதைக் கூறியதும், அக்கூற்றுக்குப் பதிலாக விழலுக்கு இறைத்த நீர் அங்குள்ள புல்லுக்கும் உணவாக அமைந்து நிலத்திற்கு செழுமை தருவதையும், எந்தவொரு பொருளும் பிரயோஜனமில்லாதது என்று ஏதும் இல்லை என்பதையும், எந்தவொரு சமயத்தையும் நாம் பாவித்து உணர்வுகளை வளர்த்தல் நன்மை பயக்கும் என்றும் விளக்கம் தந்தார்.

அடுத்துச் சிறப்புரை ஆற்றிய ஆசிரியை திருமதி கமலா மகாலிங்கம், ஆத்மஜோதி ஐயாவை வணங்கித் துதிபாடி, 1994ம் ஆண்டு அவரால் தொடங்கப்பட்ட இப்பேரவை ஆற்றி வரும் சைவ சமயத் தொண்டினையும், நாயன்மார்கள தந்தருளிய திருமுறை களினால் தாம் பெற்ற அனுபவப் பயன்களை நினைவுகூர்ந்துச் சிறப்பித்தார். வாழ்க்கையின் நோக்கம் என்ன? சிவதத்துவங்களில் உள்ள தொலைநோக்குப் பார்வையானது எப்படி ஒவ்வொருவரின்



***திருமுறை மனனப்போட்டியில் முதற் பரிசுபெற்ற பிள்ளைகள் அரங்கில் பாடும்பொழுதும்,* Saiva Saints *நூலை எழுதிய குமார் புனிதவேல் அவர்கள் கௌரவிக்கப்படும் பொழுதும்.***

வாழ்க்கையின் வழிகாட்டுதல்களாக அமைந்துள்ளது என்பது பற்றி உரையாற்றினார். இப்பேரவை எத்தனையோ சோதனைகளையும், இடர்பாடுகளையும் சமாளித்து மனம், உள்ளம் மற்றும் ஆன்மீகரீதியாக அனைவரையும் பயனடையச் செய்துள்ளது என்றார். இவ்வமைப்பிற்கு எனச் சொந்தக் கட்டிடம் அமைய வேண்டியதின் நிலைப்பாட்டைச் சுட்டிக்காட்டி அனைவரும் ஆதரவு நல்கி நிதி வழங்கிட வேண்டும் என்ற கோரிக்கையும் முன்வைத்தார்.

அவரது உரையைப் பாராட்டி விமர்சித்த தலைவர் அவர்கள், எப்படி தாயகத்தில் வாழ்ந்த சேர் பொன் இராமநாதன் அவர்கள் மருதனார்மடத்திலும், திருநெல்வேலியிலும் கல்வி நிலையங்களை நிறுவ தன் வாழ்க்கையை அர்ப்பணித்தார் என்பதை விளக்கினார்.

பரமேஸ்வரா கல்லூரியை கட்ட தனது சொந்த வீட்டை விற்று முதலீடு செய்ததையும். அது இன்று ஒரு பல்கலைக் கழகமாய் உருவாகியுள்ளதையும் பெருமைபடக்கூறி, ஆத்மஜோதி முத்தையாவின் கனவினை நினைவாக்கிட அனைவரும் நிதி வழங்கி இப்பேரவை வளர்ச்சியில் ஈடுபட வேண்டியதின் அவசியத்தை வலியுறுத்தியதோடு, திருமுறை விழா சிறப்பு மலர் ஞாயிற்றுக்கிழமை வெளியிடவுள்ளதையும் கூறினார்.

கவிநாயகர் கந்தவனம் அவர்கள் தனது தலைமையுரையில் கனடாவில் உள்ள எத்தனையோ குடும்பங்களில் முதியோர்களின் வாழ்க்கையில் எதிர்கொள்ளும் பிரச்னைகளைப் பற்றியும், மன உளச்சல் காரணமாய் அமைதியைத் தேடி இந்து சமயப் பேரவையில் சேர்ந்து, ஆன்மீகத்தில் ஈடுபட்டு நிம்மதி பெறுவதையும் திருமுறை ஓதுவதால் நிச்சியம் அனைத்துப் பலன்களைப் பெற முடியும் என்பதை சுட்டிக்காட்டினார். மேலும் அன்றைய விழாவின் சிறப்புகளை முன்னுரையாக வழங்கி, கடந்த 15 ஆண்டுகளாய் இப்பேரவை ஆற்றியுள்ள சேவைகளையும், குறிப்பாக மூத்த வயதடைந்த உறுப்பினர்கள் ஒன்றிணைந்து சைவ சமயத்தைப் போற்றி வணங்கி, இந்து சமய கோட்பாடுகள் அகிலம் முழுவதும் தழைத்திட தங்களை ஈடுபடுத்திக்கொண்டுள்ளதை வெகுவாகப் பாராட்டி, குறிப்பாக இங்குள்ள இளைய சமுதாயத்தினரிடம் தமிழர்களின் ஆன்மீக கலாச்சார மரபுகள் பின்பற்றப்படவேண்டிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் சமயப் போட்டிகளாக திருமுறை மனனம் செய்து ஒப்புவித்தல், ஆன்மீகப் பேச்சு மற்றும் சைவ சமய எழுத்துப் பரீட்சை என இளம் சிறார்களின் வயதிற்கேற்ப நடத்தி நினைவுப்பரிசுகள், கேடயங்கள், பதக்கங்கள் மற்றும் பாராட்டுச்

சான்றிதழ்கள் வழங்கி ஊக்குவித்து வருவதையும் தனது தலைமையுரையில் குறிப்பிட்டு, இவ்விழாவில் பங்குகொண்டு சிறப்பிக்கும் அனைவருக்கும் நன்றி பாராட்டி நிறைவு செய்தார்.

அடுத்து சிறப்புச் சொற்பொழிவாற்றிய கலாநிதி நா. சுப்பிரமணியன் அவர்கள் இந்நூலின் சிறப்புகளைப் பற்றிப் பாராட்டி உரையாற்றும்போது, சைவத்தை சமூகப்படுத்துவதில் திருமுறைகள் ஆற்றிய பங்களிப்பைப் பற்றி விரிவானதொரு விளக்கமளித்து உரையாற்றினார்.

குறிப்பாக காளாமுகம், காபாலிகம் முதலியன சார்ந்த தொன்மையான மண்டையோட்டுக் கலாச்சார நிலையிலிருந்த சைவத்தை தமிழர்களின் நாகரிகம் வளர்ச்சியுற்ற காலத்திற்கேற்ப சைவ சமயத்தை நாகரிகமுடைய மக்களின் சமயமாக்கிய பெருமை திருமுறைகளுக்கே உரியது என்பதை பல்வேறு சான்றுகளுடன் தெளிவு படுத்தினார். அவ்வகையில் திருநாவுக்கரசரின் சமயப் பணிகள் எவ்வாறு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது என்பதையும், சுடலையாடியாகிய சிவபெருமானைக் கோயிலில் உறையும் ஆனந்த நடராஜப் பெருமானாக காட்டி, சைவ வரலாற்றில் ஆலயங்களைப் மையப்படுத்திய வாழ்வியலுக்கு வழிகாட்டியாகவும், ஒரு முன்னோடியாகவும் திகழ்ந்தவர் என்றார். திருநாவுக்கரசர் சமண சமயம் சார்ந்தியங்கிய காலகட்டத்தில் அதிலிருந்து பெற்ற பல அரிய அம்சங்களைச் சைவ சமயத்திற்கு எடுத்து வந்து சைவ பக்தி இயக்கத்தை வலுப்படுத்தியதோடு அவர் தொடங்கி வைத்த கோயிலை மையப்படுத்திய பக்திச்சூழலே சைவத்தை மண்டையோட்டுக் கலாச்சாரத்திலிருந்து மீட்டெடுத்து, மக்களை பின்பற்ற வைத்து சமயநெறியாக்கியது என்பதைச் சுட்டிக்காட்டினார். இந்துச் சமயப்பேரவை நடத்தும் ஆன்மிக சேவையை பாராட்டி தனது சிறப்புரையை நிறைவு செய்தார்.

தொடர்ந்து அன்றைய சிறப்பு நிகழ்வாக இடம் பெறும் திரு. குமார் புனிதவேல் அவர்கள் எழுதிய Saiva Saints எனும் ஆங்கில நூல் வெளியீட்டுரையை, மகாஜனக் கல்லூரி முன்னாள் அதிபர் திரு பொ.கனகசபாபதி அவர்கள், தனக்கே உள்ள தனித்துவமான ஆராய்ச்சி நோக்கில், 63 நாயன்மார்களைப் பற்றிய ஒரு தொகுப்பு நூலாக எழுதப்பட்டுள்ளது, இன்றைய இளைய சமுதாயத்திற்கு அனைத்து வகையிலும் பயன் அளிக்கக்கூடியதாக ஆங்கில மொழியில் வெளியிடப்படுவது மிகவும் பொருத்தமாக அனைவரின் வரவேற்பிற்குரியதாக அமைந்துள்ளதை பல்வேறு

கோணங்களில், பலவித மேற்கோள்களுடனும், பிற பக்தி இலக்கியங்கள், திருக்குறள் போன்றவற்றோடு ஒப்பிட்டு விவரித்தது அனைவரின் சிந்தனைக்கும் விருந்தாக அமைந்தது. அவரது உரையில் நாம் அனைவரும் சைவ சமயத்தைப் பற்றி அதிகம் அறிந்திருந்தாலும் அதில் ஈடுபட்டதின் நோக்கம் நிறைவேறியிருக்கிறதா என்பதை இந்நூலின் இறுதிப்பக்கத்தில் To propagate our Tradition and culture என ஆசிரியர் குறிப்பிட்டுள்ளதையும், அடுத்த தலைமுறைக்காக எளிமையான ஆங்கிலத்தில் 63 நாயன்மார்களின் வரலாற்றை தொகுத்தளித் துள்ளதையும் வெகுவாகப் பாராட்டினார். நாம் எப்படி சைவ சமயக் கோட்பாடுகள் எல்லாவற்றையும் கேட்டறிந்துகொண்டோமே தவிர அப்படி வாழ்ந்து காட்டியிருக்கிறோமா என்ற வகையில் இந்தக்கால இளைஞர்கள் சிந்தனைபூர்வமாக அதீத வளர்ச்சியுற்று ஏன்? எதற்கு, எப்படி என்று கேள்விகேட்கும் மனப்பக்குவம் கொண்டவர்களாகத் தங்களது அறிவுத் திறனில் மேன்மையுற்று விளங்குவதையும் சுட்டிக்காட்டினார். இந்நூலில் அதற்கான அனைத்து வியாக்கியானங்களை (interpretation & Anectodes) உள்ளடக்கிய நூல் இது என்றார். குறிப்பாக இந்நூலில் உள்ள அனைத்து நாயன்மார்களின் பெயர்களும் காரணப்பெயர்களாக அமைந்துள்ள தையும். கலை மற்றும் சமயம் என்ற ஊடகங்கள் மூலம் தமிழையும் சமயத்தையும் இளைய தலைமுறையினர் எளிதாக புரிந்து கொள்ளும் வகையில் எதுகை மோனையோடு, நிறைய திருக்குறள் வரிகளுடன் அடக்கவுடைமை, செய்நன்றியறிதல், கள்ளாமை என கலாச்சார வளர்ச்சிக்கு ஏற்ப அமைத்துள்ளது என்றார். குறிப்பாக இந்நூலில் friendship, self control, volunteerism and humility ஆகியவற்றிற்கு அடையாளமாக வாழ்ந்துகாட்டிய இயற்பகை நாயனார் போன்ற நாயன்மார்கள் சமூகத்திற்கு ஆற்றிய தொண்டினையும், நற்பணிகளையும் தந்துள்ள இந்நூல் அனைவரையும் படித்து இன்புற வைக்கும் என்று கூறி நூலாசிரியரை வாழ்த்தி தனது நூல் அறிமுகவுரையை நிறைவு செய்தார்.

ஏற்புரை வழங்கிய நூலாசிரியர் அவர்கள் முதலில் இப்பேரவை தனக்கு அளித்த இவ்வாய்ப்பிற்கும், நூல் வெளிவர உதவி புரிந்த சான்றோர்களுக்கும் நன்றி கூறி, இன்றைய இளைய தலைமுறைகள் சைவ சமயத்தைப்பற்றியும், நாய்னமார்களைப் பற்றியும் அறிய வேண்டியதின் அவசியத்தையும், ஆதிசங்கரர், இராமகாவியம், பகவத்கீதையில் ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மா போன்றோர் எப்படி பிரம்மத்தையும், அகப்பற்று, புறப்பற்றினையும் உணர

வைத்தார்களோ அவ்வாறே வருங்கால சந்ததியினர்கள் எளிதாய் புரிந்து கொள்ளும்படி இந்நூலை எழுத முற்பட்டதையும், Hero worship என்ற நிலை மாறவேண்டும் என்பதையும் தனது உரையில் வெளிப்படுத்தி அனைவருக்கும் நன்றி பாராட்டினார்.

நூல் வெளியீட்டு வைபவத்தை தலைவர் அவர்கள் அறிமுகபபடுத்த, முதல் பிரதியை சைவப் பெரியார் திரு நா. சிவலிங்கம் அவர்களும், சிறப்புப் பிரதியை பேரவையின் பொருளாளர் செ. சோமசுந்தரம் அவர்களும் பெற்றுக்கொண்டதற்குப் பின் அனைவரும் நூலாசிரியரிடமிருந்து பெற்றுக்கொண்டனர். நூலாசிரியையரை பொன்னாடை, சந்தனமாலை மற்றும் நந்திக்கோடி ஆகியவற்றை அணிவித்து பேரவையின் சார்பில் கௌரவித்தார்கள்.

அடுத்ததாக பேரவை முன்பு நடத்திய மனன போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களின் பேச்சும், அவர்களை கௌரவித்து பரிசுகள், தங்கப் பதக்கங்கள் மற்றும் சான்றிதழ்கள் ஆகியவற்றை ஸ்காபரோவில் மிகவும் பிரசித்த பெற்ற ஸ்ரீ முருகன் புத்தகசாலை அதிபர் திரு மகேசன், அவரின் துணைவியார் ஆகியோர் பேரவையின் செயலாளர் திரு. சிவ முத்துலிங்கம் அவர்களின் உதவியுடன் வழங்கிச் சிறப்பித்தார்கள்.

அன்றைய வைபவத்தின் சிறப்பு நிகழ்வாக இடம் பெற்ற கலை நிகழ்ச்சிகளை நடன ஆசிரியை திருமதி மாலினி பரராஜசிங்கம் அவர்களுடன் இணைந்து 5 முதிய பெண்மணிகள் மகாகவி பாரதியாரின் பாடல்களான விடுதலை விடுதலை மற்றும் ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே என்ற பாடல்களுக்கு நடனம் ஆடி அனைவரையும் மகிழ்வித்தார்கள். அக்கலைஞர்களை கௌரவித்து கலாநிதி கௌசல்யா சுப்பிரமணியம் பதக்கங்கள் அணிவித்துச் சிறப்பித்ததற்குப் பின் இலங்கை பாராளுமன்ற உறுப்பினர் திரு ஈழவேந்தன் அவர்களின் சிறப்புரை இடம் பெற்றது.

இறுதியாக திருமதி இராசலட்சுமி சணமுகலிங்கம் அவர்களின் நன்றியுரை இடம்பெற்றது. திரு. சிவபரமானந்தம் அவர்களின் தேவார பாராயணத்துடன் முதல் நாள் நிகழ்ச்சிகள் இனிதே நிறைவடைந்தன.

- தொடரும்

---

எண்ணங்களே எழாத ஒருங்கிணைந்த மனமே தூய மனம். அந்த மனமே உண்மையைக் காட்ட வல்லது. தண்ணீர் தூய்மையாக இருக்கும் போது அதில் எதைக் கலந்தாலும் தூய்மை கெடுகிறது. மனமும் ஆத்மாவை பிரதிபலிக்க வேண்டுமானால் அதில் எண்ணங்களே இருக்கக்கூடாது. - ஒரு ஞானி

# திருமுறைகளின் தாற்பரியம்

திரு. ச. அழகரத்தினம்
(இளைப்பாறிய சுங்க இலாகா பிரதிப் பணிப்பாளர்)

சென்ற இதழ் தொடர்ச்சி

சந்தேகம் 11 : பதினொராம் திருமுறையில் சேரமான் பெருமாள் நாயனார் அருளிய கைலாயஞான உலாவில் சிவபெருமானது திருக்கோலத்தைத் தரிசித்துப் பெண்கள் காதல் வேட்கையால் கைவளையல்கள் கழரவும் ஆடைகள் நழுவி வீழவும் நின்று பரிதவித்தனர் எனச் சொல்லப்படுகிறதன் தாற்பரியம் யாது?

தெளிவு : சிவஞானபோதம் பதினொராம் சூத்திரம் ஆன்மா சிவனாரது திருவடிகளை அடையுமாறு சிவனே தொழிற்படச் சிவப்பேறு கிடைக்கப் பெற்று அனுபவித்தல் கூறப்படுகின்றது.

இந்தக்கிரமத்தில் பதினொராந் திருமுறையில் ஆன்மாக்கள் தத்தம் பக்குவங்களுக்கு ஏற்றாற்போல் சிவனுடன் புணருமாறு விழையும் பேரின்ப இச்சையை உலகியலில் சிற்றின்ப வாயிலாக விளக்கும் பான்மையே மேற்கூறப்பட்ட கைலாயஞான உலாச் செய்தி எனலாம்.

பதினொராம் திருமுறையில் இறைவன், அதாவது திரு ஆலவாய் ஆவுடையார், சேரமான் பெருமானுக்குத் தம் பக்தராகிய பாணபத்திரருக்கு வேண்டிய பொருளுதவி புரியுமாறு அருளிய அறக்கட்டளை முதற் திருமுகப் பாசுரமாக அமைதல் காண்க.

சிவனே இங்கு முதற்கண் வெளிப்படுதல் இத்திருமுறைக் காப்பியத்தின் சிறப்பாம். இறைவன் வெளிப்பட ஆன்மாக்கள் தத்தம் பக்குவங்களுக்கேற்ப அவரை அணைதல் முறையாகக் கூறப்படுகிறது.

சிவனே நாயகனாகவும் அனைத்து ஆன்மாக்களும் பெண்களாகவும் இங்கு பேசப்படுகிறது. ஆன்மாக்களின் பக்குவங்களைப் பெண்களின் பல்வேறு (7) பருவங்களின் மேல் வைத்து விள்க்கம் தரப்படுகிறது.

பெண்களில் ஐந்து வயதிற்கு குறைந்தவர்கள் ஆண்மகனைப் (தலைவனைப்) பற்றி உணர்வு ஒன்றும் இல்லாதவர்கள். எனவே அவர்களுக்கு பக்குவம் கூறப்படவில்லை.

இந்த ரீதியில் உள்ள ஆன்மாக்கள் அன்றாடம் உண்டுடுத்து உறங்குபவர்களே தவிர கடவுள் பற்றிய கருத்துக் கனவிலும் கொள்ளார்.

ஐந்து வயதுக்கு மேல் ஏழு வயது வரையுமுள்ள பெண்கள் ”பேதை”ப் பருவம் எய்துவார்கள் எனப்படுகிறது. இவர்கள் தலைமகனைப் பற்றிச் சிந்தியாதவர்கள் அவனை ஈர்க்கும் பெற்றியும் அறியாதவர்கள். எனினும் ஆண் பெண் பேதம் தெரிந்தவர்கள்.

இந்தப்படியில் இயங்கும் ஆன்மாக்கள் கடவுள் பற்றிய சிந்தனை இல்லாத மந்தநிலையில் இருப்பினும் கடவுள் இருப்புப் பற்றிய சந்தேகம் கலந்த சிந்தனை சிறிது கொள்ளத்தான் செய்வார்கள்.

ஏழு வயது முதல் பதினொரு வயதுவரை உள்ள பெண் ”பெதும்பை” எனப்படுகிறாள். பெதும்பைப் பெண்கள் தலைமகனைச் சாருங் காலம் வரும் என்று தெரிந்தவர்கள். ஆனால் அதுபற்றி அதிகம் கவலை கொள்ள மாட்டார்கள்.

இந்தப் பக்குவம் அடைந்த ஆன்மாக்கள் கடவுள் ஒருவர் இருக்கிறார் என்றும், அவரை அடையும் காலம் ஒருகால் கிட்டும் என்றும் கொள்வார்கள் எனினும், அதுபற்றிச் சற்றும் சிரத்தை காட்டார்.

”மங்கை”ப் பருவப் (12.∵.13) தலைமகனைப் பற்றிய எண்ணம் உள்ளத்தில் அரும்பும் நிலையில் செயல்படக் காணலாம்.

இந்த மங்கைப் பருவ ஆன்மாக்களுக்குக் கடவுள் இருப்புப்பற்றி அறியும் ஆவல் மேலோங்கி நிற்கும். அதற்குரிய இலட்சணங்கள் சிறிது சிறிதாக வெளிக்காட்டும்.

”மடந்தை”ப் பருவப் பெண்கள் (14.∵.19) தலைமகன், இரும்புக்கு காந்தம் போலத் தங்களை ஈர்ப்ப, இருப்புக் கொள்ளாது தலைவனை அடையும் மார்க்கம் சரிவரக் காணாது துடிப்பர்.

இதற்குச் சமானமான படியில்லுள்ள ஆன்மாக்கள் இறைவனின் திருவருளின் ஈர்ப்புக்குள்ளாகி அவனை முழுமையாக அடையுமாறு புரியாது பல்வேறு பிரயத்தனங்களைக் கையாள்வர். ”அரிவை”, ”தெரிவை”ப் பக்குவப் பெண்கள் (20.∵.25, 26.∵.30)

தலைவனின் கலவி பற்றிய தியானத்தில் தலைவனை நோக்கிப் பல்வேறு சேட்டைகளைப் புரிந்து மயங்குவர்.

இந்தப் பக்குவ ஆன்மாக்கள் இறைவன் தரிசனம் ஓரளவு பெற்று சிவபோகத்தை யாசித்துப் பல்வேறு பூசாக்கிரமங்களை அனுட்டித்துப் பக்தியில் திளைப்பர்.

"பேரிளம்பெண்" பக்குவப் பெண்கள் (31.'.40) தலைவன் கலவியை அனுபவித்து அவனைப் பிரியாது அவனில் தம்மை இழந்து இன்ப ஊற்றில் ஒன்றி ஒடுங்குவர்.

இந்தப் பக்குவத்திற்குச் சமமான ஆன்மாக்கள் இறைவனைத் தவிர வேறொன்றையும் காணார். இவர்கள் சிவனுடன் அத்துவிதமாகி (சிவபோகத்தில் தங்களை முற்றாக இழந்து) ஏகனாகி இறைபணி நிற்பர். இறைபணி நிற்பர் என்றது தங்கள் செயல்கள் இன்றி எல்லாம் இறைசெயல்களாகக் கண்டு செயல்களைப் புரிதல் எனப் பொருள்படும்.

இங்கே பெண்கள் தலைவனைக் கண்டு வளையல் கழரவும், ஆடைகள் நழுவவும் நிற்கும் நிலை ஆன்மாக்களுக்களைப் பொறுத்தமட்டில் மிகமுக்கியமான இடம். சிவனடியார் நிலை இதுவே.. இறைவனைக் கண்டதும் உலகியற் பாசம் நீங்கிவிடும். பெண்களின் கைவளையல்கள் கழருவது என்பது பாச நீக்கத்தையே குறிக்கும். அங்ஙனம் நீங்கவே தனுகரணாதி தத்துவங்கள் வலிகெட்டுச் செயலற்றுவிடும். ஆடைகள் நழுவுதல் இதையே குறிக்கும். முப்பத்தாறு தத்துவங்களும் நீங்கப் பெறுவர். புறப்பற்று நீங்க அக்ப்பற்றுத் தொழில்படும்.

சிற்றின்பம் பேரின்ப வாயில் என்பர் அறிவறிந்த பெரியோர். ஒருகாதல் முதிர்ந்த பெண் தன்தலைவனின் புணர்ச்சியில் தன்வசம் முற்றாக இழந்து தன்னை அவ்னாகக் காண்கிறாள். தலைவனில் தலைவி இரண்டறக் கலக்கிறாள். கலவியில் அக்கணம் காணும் இரண்டற்ற ஒருமை உணர்ச்சியே சிற்றின்பத்தின் மூலம் அனுபவிக்கின்ற அத்துவிதம் எனலாம்.

பக்குவம் முதிர்ந்த ஆன்மா சிவத்துடன் ஐக்கியப்படும்போது பேரின்பம் துய்த்துத் தன்னை இழந்து சிவமாகி அனுபவிக்கிற அத்துவிதம் பற்றிய ஆன்மீக விளக்கமே கைலாய ஞானஉலாவில் சித்தரிக்கப்படுகிறது.

(''பரமேசுவரனது சீபாதங்களை அணையுமாறு" இங்கு உணர்த்தியது.)

# புலால் மறுப்பதற்கு ஏழு காரணங்கள்

குமார் புனிதவேல்

சென்ற இதழ் தொடர்ச்சி

இவை தேவைதானா என்று சிந்தித்துப்பாருங்கள். Fast Food எனப்படும் திடீர் உணவுகள் தீமை பயப்பதற்கு இருகாரணங்கள் 1. அதிகம் புலால் 2. அதிகம் கொழுப்பு. ஆரோக்கியமான வாழ்வை விரும்புவர்கள் புலாலை விலக்குவது அவசியம். மேலும் எடைகுறைப்பதற்கு முதற்படி புலால் உணவை தவிர்ப்பது என்பது இரண்டாவது காரணம் புலால் மறுப்பதற்கு பிரித்தானியாவில் vegfram எனும் நிறுவனம் செய்த கணிப்புப்படி 10 ஏக்கர் நிலத்தில் சோயா கடலை நட்டால் 60 பேருக்கு வேண்டிய உணவுதரும். கோதுமை வளர்த்தால் 24 பேருக்கு வேண்டிய உணவுதரும். சோளம் சாகுபடி செய்தால் 10 பேருக்கு இருவருக்கு வேண்டிய உணவு மட்டுமே தரும். மேற்குநாடுகளில் சிலர் 2000 இறாத்தல் வரை தானியம் உட்கொள்கிறார்கள். Frances Moors என்ற எழுத்தாளர் தனது Diet for a small planet என்ற புத்தகத்தில் கற்பனை செய்து பாருங்கள். ஒரு அறையில் 45 முதல் 50 வரை வெறும்பாத்திரத்துடன் மக்கள் நிற்க நீங்கள் உண்ணும் Steak அவர்கள் ஒவ்வொருவருடைய கையிலும் ஒரு கோப்பை தானியம் கொடுக்க முடியும் என்கிறார் இப்படி மாமிசம் உண்பவர்கள் தொடர்ந்தால் எனது சந்ததியினர் பட்டினியால் அழிந்து போவார்கள் என்கிறார்.

Harvard பல்கலைக்கழக பேராசிரியர் Jean Mayer குறிப்பிடுகையில் புலால் உற்பத்தியை அமெரிக்கா 10 விகிதத்தால் குறைத்தால் 60 Million மக்களுக்கு வேண்டிய தானியங்களை உற்பத்தி பண்ண முடியும் என்கிறார். எனவே மூன்றாவது நல்ல காரணம் புலால் உண்பதை தவிர்ப்பது மனித இனம் தொடர்ந்து இருப்பதற்கு அவசியமாக உள்ளமையாகும்.

இன்று சுற்றாடலை காப்பதன் அவசியத்தை ஆராய்வதற்கு பல சுற்றாடல் பற்றிய அறிஞர்கள் கலந்துரையாடலுக்குப்பின் நல்ல புலால் போசனத்தை புசிக்கிறார்கள். அவர்கள் வீதியில் ஓடும் வாகனங்கள் சுற்றாடலை பாதிபபதாக வாதிடுகிறார்கள். ஆனால் வாகனங்களிலிருந்து வரும் வாயுவிலும், மிருகங்கள் வளர்ப்பில் வெளிவிடப்படும் வாயுக்கள் கூடிய பாதிப்பை ஏற்படுத்தும். மிருகங்கள் வெளியிடும் மீதேன், நைட்ரஸ் ஒக்சைட் போன்ற வாயுக்கள் முறையே 23 மடங்கும் 296 மடங்கும் பான்டைஒக்சைட் வாயுவின் தாக்கத்தை வளிமண்டலத்தில் ஏற்படுத்துகிறது.

அண்மையில் நடந்த கணிப்புப்படி வளிமண்டலத்தை பாதிக்கும் காபன்டைஒக்சைட்டின் 9% கால்நடைமிருகங்கள் வெளிவிடும் வேளையில் 37% மீதேனையும் 65% நைட்ரஸ் ஒக்சைட்டையும் வெளிவிடுகின்றன. இன்று நாங்கள் வாகனங்களுக்கு பாவிக்கும் எரிபொருளுக்கு மாற்றம் கண்டுபிடிக்க சில காலம் எடுக்கலாம். ஆனால் உடனேயே புலால் உணவை தவிர்ப்பதால் வளிமண்டலத்தில் ஏற்படும் மாற்றத்தை குறைக்க முடியுமல்லவா? எனவே புலால் உணவை தவிர்ப்பதற்கு நாலாவது நல்ல காரணம் வளிமண்டல மாற்றத்தை தவிர்ப்பது எனக் கொள்ளலாம்.

புலால் உணவிற்கு ஏற்பட்டுள்ள பெரும் தட்டுப்பாடு காரணமாக கால்நடைகள் ஆலைகள் போல் வளர்க்கப்படுகின்றன. சராசரி புலால் உண்ணும் ஒருவர் தன் வாழ்நாளில் 2400 மிருகங்களை உடகொள்கிறார் என கணிக்கப்பட்டுள்ளது. அந்த மிருகங்களை உண்டு வாழும் மனிதனை புதைக்க வேண்டிய இடத்திலும் குறைந்த இடத்தில் இம்மிருகங்கள் வாழும் கொடுமை காணச் சகியாது. அதே கட்டுரையில் பன்றிகளை நெருக்கிவைப்பது ஆதாயத்தை தரும் என்று கூட குறிப்பிட்டுள்ளார்கள். இந்த மிருகங்கள் தமது குறுகிய வாழ்வில் சூரியனை காணாமலே கழித்துவிடுகின்றன. இந்த மிருகங்கள் துயில்வதற்கு வைக்கோலோ அல்லது உருண்டு புரள்வதற்கு சதுப்பு நிலமோ கிடையாது. அவைகள் தம் வாழ்நாளை இரும்பு வலையிலேயே கழிப்பதுடன் அவற்றின் கழிவுப்பொருள்கள் அடியில் தள்ளி பெரும் கிடங்குகளில் சேர்க்கப்படுகிறது.

இறைச்சிக்காக வளர்க்கப்படும் மிருகங்கள் நலம் அடிக்கப்படுகிறதுமல்லாமல் அவற்றின் கொம்புகள் ஆரம்பநிலையிலேயே பிடுங்கப்படுகிறது. Veal எனப்படும் மாட்டிறைச்சி பெறுவதற்கு குட்டிபோட்டவுடன் தாயிலிருந்து பிரிக்கப்பட்டு கழுத்தில் சங்கிலி போட்டு அசையமுடியாமல் இருட்டில் வைக்கிறார்கள். இவைகள் தாம் இப்படி என்றால் கோழிப்பண்ணையை எடுத்துக்கொண்டால் அசையமுடியாத சிறு இரும்புக்கூட்டில் தம் வாழ்நாளை கழிக்கும் கோழிகள். ஒருசிறு கட்டிடத்தில் 100,000 கோழிகள் வளர்க்கிறார்கள். இவைபற்றிக் கூறுவதானால் எவ்வளவோ கூறலாம். ஆனால் சுயநலவாதியான மனிதனுக்கு இவற்றை உண்பதனால் என்ன தீமை என்ற கேட்கலாம். அவைகள் மிக நெருக்கமாக வதிவதுடன் மிகமிக சுகாதாரக்குறைவான சுற்றாடலில் வசிப்பதனால் அளவுகணக்கின்றி அவற்றின் உணவுடன் antibiotic

மருந்துகள் கலக்கப்படுகின்றன. இந்த மிருகங்களை உண்ணும்மனிதர் உடலில் இம்மருந்துகளுக்கான தடுப்புக்சக்தி (antibodies) உண்டாகின்றது.

பல வருடங்களுக்கு முன் ஈழத்துப் புலவர் நவாலியூர் சோமசுந்தரப்புலவர் பாடிய பாடல் ஒன்றை இங்கு குறிப்பிடலாம். அவர் பாடிய பாட்டின் பெயர் 'ஏறாதமேட்டிற்கு இரண்டுதுலா இட்டிறைத்தல்'' இப்பாடலில் அவர்மிக அழகாக சதிமானாகிய பூராய மாமுதலியார் எப்படி அவர்வீட்டு மலசலகூட சுத்திகரிக்கிறவன் மலத்தை உண்டார் என காட்டப்படுகிறது. முதலியார் சனிக்கிழமை எண்ணை முழுகிவிட்டு மதிய போசனத்துக்கு கோழிக்கறி சாப்பிட்டதாகவும் அந்தக் கோழி மலசலகூட தொழிலாளிவீட்டு மலசலகூடத்தில் அழுக்கு உண்டுகொண்டிருந்ததாகவும் குறிப்பிட்டிருந்தார். எனவே அத்தொழிலாளிவீட்டு அசிங்கத்தை முதலாளி சாப்பிட்டுவிட்டார்.அதேபோலத்தான் இப்படி வளர்க்கப்படும் மிருக பட்சிகள் மருந்துகளை உண்பதனால் அம்மருந்துகள் அவற்றை உண்பவர் உடலில் தடுப்புச்சக்தியை உண்டு பண்ணுகிறது. இச்சக்தியானது அந்த மருந்துகளை பாவிக்கும்போது பயனற்றுப்போகிறது. ஒவ்வொருவரும் நீணடகாலம் வாழ்வதற்கு விரும்புவர். ஆனால் நெருங்கிய இடத்தில் வளர்க்கப்படும் பறவை மிருகங்களை புசிப்பவர் சிறுவருத்தங்கள் வரும் வேளையிலேயே அந்நோயால் இறந்துவிடுவார்கள். எனவே புலால் புசிப்பதை தவிர்ப்பதற்கு ஐந்தாவது காரணம் மருந்துகளை எதிர்க்கும் சக்தியை உடம்பு பெறாதிருப்பதாகும்.

எமது உடம்பிலுள்ள உயிரணுக்கலன்கள் அழிவதை தவிர்க்கும் பதார்த்தத்திற்கு antioxident என குறிப்பிடுவர். எமது உயிர்கலன்கள் ஒட்சிசனை எரித்து சக்தியாக்கும்வேளை free radicals எனும் பதார்த்தத்தை உண்டுபண்ணுகிறது. இந்த Free radicals உயிர்கலன்களின் சகல பாகங்களையும் அழிக்கும் தன்மையுடையது. தாவர உணவை உட்கொள்வதுதான் ஆரோக்கியமான உயிர் கலன்களை பெறுவதற்கு உகந்த வழி. இதற்கு காரணம் மரக்கறி உணவுகள் Antioxidents நிறையவே உடையதாயிருக்கும். எனவே புலால் உணவை தவிர்த்து மரக்கறி உணவை உட்கொள்வதற்கு ஆறாவது காரணம் அவற்றிலுள்ள Antioxidants ஆகும்.

இறுதியாக ஒரு உறுதியான காரணம் உண்டு. 2007ஆம் ஆண்டு தைமாதம் 22ஆம்திகதி Daily Telegraph பத்திரிகையில்

ஒரு செய்தி British medical jounal நடத்திய ஆய்வுப்படி மரக்கறி உணவு உண்பவர்கள் புலால் உண்பவர் களிலும் புத்திசாதுரியம் உடையவர் என்று குறிப்பிட்டுள்ளது.

ஆய்வுக்குழு உண்ணும் உணவுக்கும் புத்திசாதுரியத்துக்கும் இடையில் உள்ள தொடர்பைநோக்கி ஏன் புத்திசாதுரியம் உடையவர் சராசரிக்கும் குறைவாக மாரடைப்பு நோயினால் பாதிக்கப்படுகின்றனர் என ஆராய்ந்தனர். 1970ஆம் ஆண்டு பிறந்த குழந்தைகளை 10 வயதிலும் பின் வாலிபரான பின்பும் நேர்காணல் செய்தனர். அந்த ஆய்வின்முடிபு இளைஞர்களில் மரக்கறி உண்பவர்களுக்கு 1க்கு 106 ஆகவும் புலால் உண்பவர்களுக்கு 101 ஆகவும் இருந்தது. அதேபோல் யுவதிகளில் மரக்கறிபோசனம் உண்பவர்களுக்கு 1க்கு 104 ஆகவும் புலால் உண்பவர்களுக்கு 96 ஆகவும் இருந்தது

இங்கு வரலாற்றிலிருந்து ஒரு சிறு துணுக்கையும் தரலாம். நோபல் பரிசுபெற்ற சிறந்த எழுத்தாளரான ஜியாஜ் பேனாட் அவர்கள் என்னுடையது போன்ற சாதுரியமான மூளை மாட்டிறைச்சி உண்பதனால் வந்திருக்க முடியாது என்று மாட்டிறைச்சி உண்டு வளர்ந்த மூளைக்கு இது புரியுமோ தெரியாது என்றார்.

மரக்கறி போசனம் உண்டு வளர்ந்தவர்களுக்கு தெரியும். தாம் புலால் உண்பவர்களிலும் கெட்டிக்காரர் என்று. ஆனால் இந்த உண்மை ஆதாரபூர்வமாக காட்டப்பட்டுள்ளது என அறியும்போது மகிழ்ச்சியாகத்தான் இருக்கிறது. நீங்களும் ஏன் கெட்டிக்காரராக கூடாது என்ற கேள்வியுடன் விடைபெறகிறேன்.




# சிவஞானபோதமும் இரௌரவ ஆகமமும் - ஓர் ஒப்பு நோக்கு.

# SIVA-JNANA-BODHAM AND RAURAVA AAGAMA - A CRITICAL COMPARISION

Dr. R. Lambotharan

**மெய்கண்டார்** பன்னிரண்டாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் அருளிய **சிவஞானபோதச் சூத்திரங்கள்** பன்னிரண்டும் வட மொழியில் உள்ள இரௌரவ ஆகமத்தின் ஞான பாதத்தின் பாச விமோசனப்படலத்தில் உள்ள பன்னிரண்டு சிவஞானபோதச் சூத்திரங்களின் தமிழ் மொழிபெயர்ப்பு என்ற கருத்து நிலவுகின்றது. இதற்கு சார்பாகவும், எதிராகவும் பலர் பேசியும் எழுதியும் உள்ளார்கள்.

பதினைந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த **சைவசித்தாந்த திருக்கைலாய ஸ்ரீகந்த பரம்பரையில் வாமதேவ ரிஷி சந்தான பரம்பரையில் வந்த சூரியனார் கோயில் ஆதீன கர்த்தர் சதாசிவ சிவாச்சாரியார்** சிவஞான போதத்தின் வட மொழிச் சூத்திரங்களுக்கு உரை கண்டவர்களுள் முதலாமவர். இவரது நூலே இன்று எமக்குகிடைக்கும் வடமொழிச் சிவஞானபோதச் சூத்திரங்களில் பழமையானதாகும். இவரது உரையில் இவர் சிவஞானபோதச் சூத்திரங்கள் தமிழில் உள்ள மெய்கண்டாரின் சூத்திரங்களின் மொழிபெயர்ப்பு என்று எங்கேயும் குறிப்பிடவில்லை. ஆனால் தனது உரையின் தொடக்கத்திலே அவர் வாரணாசியில் மணிகர்ணிகை கட்டத்தில் இருந்த தனது குருமடத்தைப்பற்றிக் குறிப்பிடுகின்றார். இதிலிருந்து வடமொழிச் சிவஞானபோதச் சூத்திரங்கள் வட இந்தியாவில் காசியில் பிரபலமாயிருந்த சைவசித்தாந்த சம்பிரதாயத்தில் இருந்தவை அல்லது அதற்கு உரியவை என்றும் ஊகிக்கலாம்.

பதினாறாம் நூற்றாண்டைச் சேர்ந்த இவரது சீடர் **சிவாக்கிர யோகி** அவர்களும் **'இலகுதீகா'** என்று இப்பன்னிரண்டு சூத்திரங்களுக்கும் ஒரு சிற்றுரை சமஸ்கிருதத்தில் எழுதியிருக்கின்றார். இதைவிட **விஸ்தாரபாஷ்யம், பிருஹத்தீகா** என்ற இரு வேறு உரைகளும் சிவஞானபோதச்சூத்திரங்களுக்கு எழுதியுள்ளார். அத்தோடு தமிழில் உள்ள சிவஞானசித்தியாருக்கும் ஓர் உரை வரைந்துள்ளார். இவரும்

யசுர் வேதத்து ஸ்ரீருத்ரத்தில் பஞ்சாட்சரத்தை மையமாகக்கொண்ட எட்டாவது அனுவாகத்தின் ரிஷியாக வழிபடப்படும் **வாமதேவ மஹரிஷியைத்** தனது குரு பரம்பரை முதல்வராகத் தான் எழுதிய **சிவநெறிப்பிரகாசம்** நூலின் ஆறாவது பாடலில் குறிப்பிடுகின்றார். வாமதேவ மகரிஷிக்கு கந்தப்பெருமான் உபதேசித்ததாக மரபு. ஆகவேதான் இவர்கள் குருபரம்பரை ஸ்ரீகந்த பரம்பரை வாமதேவ சந்தானம் என்று வழங்கப்படுகின்றனர். யாழ்ப்பாணத்தில் பிறந்த **இலக்கணம் முத்துக்குமாரத்தம்பிரான்** சுவாமிகள் இந்தக் குருபரம்பரையில் ஸ்ரீ சுப்பிரமணியதேசிகரிடம் இருந்து பெற்ற ஒரு சிவஞானமாபாடியப் பிரதியை மிகவும் நெருக்கடியான நிலையில் கைவிளக்கின் உதவி கொண்டு பிரதி பண்ணி முதன்முதலாக **சிவஞானமாபாடியத்தை** 1921இல் பதிப்பித்து வெளியிட்டார்கள். சூரியனார் கோவில் ஆதீனத்தின் புகழ் இதனால் எங்கும் பரவியது. இவர் 1949இல் **ஞானாவரணம்** நூலை அச்சிடுவதற்காக ஆராய்ந்துகொண்டிருந்தகாலை சிதம்பரத்தில் காலமானார்.

ஆனால் **மெய்கண்டாரின்** குருபாரம்பரியம் **நந்திதேவர்** மூலம் தொடங்கி **சனற்குமாரர், சத்தியஞானதரிசனி, பரஞ்சோதிமுனிவர்** வழியாக வந்த திருக்கைலாய பரம்பரையாகும். இதுவே இன்றைய **திருவாவடுதுறை ஆதீனம், தருமபுர ஆதீனம்** ஆகியவற்றின் குருபாரம்பரியம். திருவாவடுதுறை ஆதீனமே யாழ்ப்பாணத்து **நல்லூர் ஆறுமுக நாவலர், வட்டுக்கோட்டை அம்பலவாண நாவலர்** ஆகியோருக்கு நாவலர் பட்டம் வழங்கிக் கௌரவித்தது என்பது பலருக்குத் தெரியும். இன்று நாவலர் என்றால் அது யாழ்ப்பாணத்து ஆறுமுகநாவலரையே குறிக்கும். ஆனால் அதுவரை குருமஹா சந்நிதானங்களுக்கே அடைமொழிச் சிறப்பாக வழங்கி வந்த ஸ்ரீலஸ்ரீ என்ற சிறப்பை ஆறுமுகநாவலருக்கு அளித்து அங்கீகரித்ததும் இந்த ஆதீனமே என்பது பலருக்குத் தெரியாத ஒன்று.

சிவாக்கிரயோகி அருளிய சிவஞானபோத இலகுதீகாவின் முதலாவது ஆங்கில மொழி பெயர்ப்பு முதன்முதல் பனாரஸ் சமஸ்கிருதக் கல்லூரியினால் 1907 இல் வெளியிடப்பட்டது (Pandit Series Vol. XXXIX, from Banares Sanskrit College). அக்காலத்தில் கிடைத்த ஒரே ஒரு ஏட்டுப் பிரதியை மட்டும் வைத்துப் பதிப்பிக்கப்பட்டதால் இதிற் பல தவறுகளும், கருத்துப் பிழைகளும் மலிந்திருந்ததாகக் கூறப்படுகிறது. தற்போது இந்தப்

பதிப்புடன் பாண்டிச்சேரி பிரெஞ்சு இந்திய ஆய்வு நிறுவனத்தில் பாதுகாக்கப்பட்டுள்ள இரண்டு ஏட்டுப் பிரதிகளையும், ஒரு கையெழுத்துப் பிரதியையும், சென்னை அரசாங்க ஏட்டுச்சுவடிகள் காப்பகத்தில் உள்ள ஒரு ஏட்டுப்பிரதியையும் ஒப்பு நோக்கி, ஆராய்ந்து, சரி பார்த்து ஆங்கில மொழிபெயர்ப்புடன் சென்னை அகோர சிவாச்சாரியார் அறக்கட்டளை **2003 இல் சிவஞானபோதம்-சிவாக்கிர யோகியின் இலகுதீகா உடன்** (Sivajnanabodha with the Laghutika of Sivagrayogi) என்ற பெயரில் பதிப்பித்திருக்கிறார்கள்.

யாழ்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலரின் மாணாக்கரும், குப்பிளானைச் சேர்ந்தவருமான **காசிவாசி செந்திநாதையரவர்கள்** 1916 இல் பதிப்பித்து வெளியிட்ட **சிவஞான போத வசனாலங்கார தீபம்** சிவஞானபோதத்தின் வடமொழிச் சூத்திரங்களையும் மெய்கண்டாரின் தமிழ் மொழிச் சூத்திரங்களையும் ஒருங்கே கொண்டு விளங்கும் ஒரே நூலாகும். இதிலே செந்திநாதையரவர்கள் **ரௌரவதந்திராந்தர்கதம் சிவஞானபோதாக்யம் சாஸ்திரம்** என்று **சிவாக்கிர யோகி** அவர்கள் முன்னர் குறிப்பிட்ட **இலகுதீகா** என்ற தனது சிவஞானபோதச் சிற்றுரையில் **"இரௌரவ தந்திரத்தினுள்ளே அடங்கியது சிவஞானபோதம் எனப்பெயரிட்ட சாஸ்திரம் என்று வரைந்தருளியிருக்கிறார்கள்"** என்று குறிப்பிட்டிருக்கின்றார். ஆனால் இந்த வரிகள் பதிக்கப்பட்ட இலகுதீகா புத்தகங்களில் காணப்படவில்லை. பாண்டிச்சேரி பிரெஞ்சு இந்திய ஆய்வு நிலையத்தில் பாதுகாக்கப்பட்டுள்ள சிவாக்கிர யோகியின் இலகுதீகா ஏட்டுப்பிரதியின் கையெழுத்துப்பிரதியிலும் இந்த வரிகள் காணப்படவில்லை. ஆயினும் அடையாறு நூலகத்தில் இருக்கும் **சிவஞானபோத வியாக்கியம்** என்ற பெயரிய வடமொழி நூலினது ஏட்டுப்பிரதியில் (NO. 68462 (20-0-9) **ரௌரவாக மாந்தர்கதம் துவாதசாச்சூத்ராத்மகம் சிவஞானபோதாக்யம் சாஸ்திரமு பதிஸ்தவான்** என்று காணப்படுகின்றது. இதன் பொருள் **"இரௌரவ ஆகமத்துள் அடங்கியதாகிய சிவஞானபோதச் சூத்திரங்கள் பன்னிரண்டு"** என்பதாகும். பாண்டிச்சேரியில் பாதுகாக்கப்பட்டுள்ள திருக்கழுக்குன்றம் சந்திரசேகரக்குருக்கள் அவர்களிடம் இருந்த ஏடுகளில் இருந்தும் திருவண்ணாமலை சின்னக்குருக்கள் அவர்களிடமிருந்த ஏட்டுப்பிரதிகளில் இருந்தும் எடுக்கப்பட்ட சிவஞானபோத வியாக்கியத்தின்

கையெழுத்துப்பிரதிகளில் இந்த வரிகள் காணப்படவில்லை.

பதினாறாம் நூற்றாண்டில் வாழ்ந்த சைவப்பேரறிஞர் **அப்பைய தீட்சிதர்** அவர்கள் வட மொழியில் உள்ள சிவஞானபோதச் சூத்திரங்களின் **ஸ்ரீகண்டபாஷி**யத்துக்கு தாம் எழுதிய **சிவார்க்கமணிதீபிகா** என்ற விளக்க உரையில் சிவஞானபோதத்தின் இரண்டாவது சூத்திரத்தை விளக்கும்போது அதனை ஆகமம் என்றே குறிப்பிடுகின்றார் (Srikanda Bhaasya II.i.16). ஆயினும் ஆகமாந்தப்பொருள் கூறும் நூல்களை உபசார வழக்கில் ஆகமம் என்று குறிப்பிடுதல் நூலாசிரியர்களினதும் ஏனையோரினதும் வழக்கமாக இருந்திருக்கின்றது. தமிழில் திருமந்திரம் பாடிய திருமூலர் **"சிந்தைசெய்து ஆகமஞ் செப்பலுற்றேனே"** என்று தாம் பாடிய திருமந்திரத்தை ஆகமம் என்றே குறிப்பிடுதல் இங்கு ஒப்பிடத்தக்கது. பாண்டிச்சேரி பிரெஞ்சு இந்திய நிறுவனம் பிரெஞ்சு மொழிபெயர்ப்புடன் பதித்து வெளியிட்ட இரௌரவ ஆகமத்தின் மூன்றாவது தொகுதியின் 58 ஆவது அத்தியாயம் **"சீடனுக்கு ஞானதீட்சையில் பாவனாதீட்சை செய்தே சிவஞானபோதச் சூத்திரங்கள் கொடுக்கப்பட வேண்டும்"** எனக் கூறுகின்றது. இதிலிருந்து வட மொழியில் உள்ள பன்னிரண்டு சிவஞானபோதச் சூத்திரங்களும் மெய்கண்டாருக்கு முன்னரே இருந்திருக்கலாம் எனவும், இவை இரௌரவ ஆகமத்தின் பகுதி எனவும் கருத இடமுண்டாகின்றது.

பாண்டிச்சேரி பிரெஞ்சு இந்திய ஆய்வு நிறுவனத்தினரால் பிரெஞ்சு மொழிபெயர்ப்பில் இது வரை மூன்று தொகுதிகளாக வெளியிடப்பட்ட இரௌரவ ஆகமத்தின் பிரதிகளில் இந்தச் சிவஞான போதச் சூத்திரங்கள் காணப்படவில்லை. உலகின் மிகப்பெரிய சைவ நூல்களின் சுவடிக்காப்பகமான பாண்டிச்சேரி பிரெஞ்சு இந்திய ஆய்வு நிறுவனத்தில் இதுவரை பாதுகாக்கப்பட்டுள்ள பத்துக்கு மேற்பட்ட இரௌரவ ஆகம ஏட்டுப்பிரதிகள் மற்றும் அவற்றில் இருந்து பிரதி பண்ணப்பட்ட கையெழுத்துப்பிரதிகளிலும் இச்சூத்திரங்கள் இல்லை. ஆதியில் பல இலட்சக் கணக்கான சுலோகங்களைக் கொண்டு விரிவான நூல்களாக விளங்கிய ஆகமங்கள் சாரமாகத் தொகுக்கப்பட்டு எழுத்துருப் பெற்றபோது கூட இப்பகுதிகள் விடுபட்டிருக்கக்லாம். தொடரும் ஆகமங்களின் பிரதிகளின் தேடலும், ஆவணப்படுத்தலும்

இவற்றை வருங்காலத்தில் வெளிக் கொணரக்கூடும்.

ஆயினும் தமிழில் உள்ள சிவஞானபோதச்சூத்திரங்களை ஆக்கிய மெய்கண்டாரோ அல்லது அவரின் சிவஞானபோதத்துக்கு விளக்க நூல்களும் வழி நூல்களும் எழுதிய அருணந்தி சிவனாரோ அல்லது உமாபதி சிவனாரோ எவ்விடத்திலும் இதை வடமொழி மூலத்தின் மொழிபெயர்ப்பென்றோ அல்லது இரௌரவ ஆகமத்தின் பகுதி என்றோ குறிப்பிடவில்லை. அதேபோல வடமொழிச் சிவஞானபோதத்துக்கு உரைகள் எழுதிய சதாசிவ சிவாச்சாரியாரோ அல்லது சிவாக்கிரயோகியோ அவர் வழி வந்தவர்களோ இது தமிழ் மொழியில் உள்ள மெய்கண்டார் அருளிய சிவஞான போதத்தின் மொழிபெயர்ப்பு என்று எங்கணும் குறிப்பிடவில்லை. மேலும் வடமொழியில் உள்ள சிவஞானபோதத்தின் கடைசிச் சூத்திரத்தின் கடைசி வரி **"ஏவம் வித்யாச் சிவஞானபோதே சைவார்த்த நிர்ணயம்"** என்று முடிகின்றது. இதன் பொருள் **"இங்ஙனமாகச் சிவஞானபோத நூலின் சைவப்பொருள் உறுதிப்படுத்தப் பட்டிருக்கின்றது"** என்பதாகும். **"ஏவம்"** என்ற வடமொழிச்சொல்லுக்கு **"இங்ஙனம்"** என்பதைச் சரியான கருத்தாகக் கொண்டு **"இங்ஙனமாகச் சிவஞானபோதத்தில்"** என்று குறித்தது மெய்கண்டாரின் தமிழ் சிவஞானபோத நூலையே ஆகும் என்று கூறி வடமொழிச் சிவஞானபோதச் சூத்திரங்கள் தமிழில் மெய்கண்டாரால் வெளிப்படுத்தப்பட்ட சிவஞானபோதச் சூத்திரங்களின் மொழிபெயர்ப்பே என்று கொள்வாரும் பலர் உளர்.

இதற்கு மாறாக **ஏவம்** என்பதற்கு **இந்த** என்று பொருள்கொண்டு **"இந்தச் சிவஞானபோத நூலின் சைவப்பொருள் இவ்வாறு உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றது"** என்று பொருள் கொண்டு வடமொழிச் சூத்திரத்தில் குறிப்பிடப்படுவது அந்தச் சிவஞானபோத நூலையே என்று கூறி வடமொழியில் உள்ள சூத்திரங்கள் தமிழில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டன அல்ல அவை வடமொழியில் உள்ள இரௌரவ ஆகமத்தின் பகுதியே என்று வாதிப்பவர்களும் பலர் உள்ளார்கள். இதற்குப் பதிலாக **"இந்தச் சிவஞான போதநூல்"** என்று பொருள் வரவேண்டுமாயின் வடமொழிமூலத்தில் **"ஏதஸ்மிந் சிவஞானபோதே"** என்று வரவேண்டுமே என்று பதில் சொல்லும் இருமொழி வல்லாளர்களும் பலர் உளர்.

# Dr. Shan A. Shanmugavadivel & Associates

## டாக்டர் அ. சண்முகவடிவேல்

**Orthodontics Implants**

பற்களுக்கு கிளிப் போடுவதிலும் Implant பல் கட்டுவதிலும் பயிற்சி பெற்றவர்

## RAINBOW VILLAGE DENTAL OFFICE

**2466 Eglinton Avenue East, Unit:7**
**Scarborough, Ontario, M1K 5J8**
**Monday to Saturday**
Near Kennedy Subway (Rainbow Village Building)

**416-266-5161**

## MAIN SQUARE DENTAL OFFICE

**7-2575 Danforth Avenue, Toronto, ON. M4C 1L5**
Mon, Tues, Wed, Thurs, Fri, Sat & Sun - Near Main Subway
Dr. Shan - Thusday (Morning)
Dr. Yao San (Tue, Fri & Sat)
Dr. Brian (Monday) Dr. May (Wednesday)

**416-690-0121**

# R & S AUTO SALES

## Top Quality New & Used Cars

**வங்கியால் உடமைப்படுத்தப்பட்ட வாகனங்களை விற்பது எமது விசேட திறன்**

**TEL: 416-412-3838**
**FAX: 416-412-1174**



RADHA

**5310 Finch Ave. Unit 23**
**Scarborough, ON.**
**Between Midllefield & Markham**

## ஆத்மஜோதி சுவாமிகளிடம் கேட்டவை

திருமுறைச் செல்வர் சிவ முத்துலிங்கம்

- நா அடங்கினால் உடல் அடங்கும். உடல் சுகத்தைத் தியாகம் செய்யும்பொழுது உள்ளமும் தானாக அடங்கி விடும்.

- ஆன்ம ஈடேற்றம் அடைய விரும்புகிறவர்களுக்கு ஒரு தகவல் உள்ளத்திலே எத்தனை நாள் அடக்கம் ஏற்பட்டாலும் பழைய வாசனைகள் இருந்தாற்போல தலைதூக்கும். ஆகவே, உள்ளத்திலே பழைய வாசனைகள் தலைதூக்காதவாறு ஒவ்வொரு கணப்பொழுதிலும் விழிப்பாக இருக்க வேண்டும்.

- தனித்திரு பசித்திரு விழித்திரு என்பவற்றிலே பெரியதொரு உண்மை அடங்கியுள்ளது. புலன் வழியே மனதை இழுத்துச் செல்லும் எண்ண அலைகளில் இருந்து விலக தனிமையாக மனத்தை வைத்திருப்பதே தனித்திரு என்பதாகும். இறைவனை அடைய வேண்டுமென்ற ஆர்வத்தோடு கணப் பொழுதும் வீணாக்காமல் தீவிர பக்தியோடும் வைராக்கியத் தோடும் இருப்பதே பசித்திரு என்பதாகும். புலன்வழி செல்லும் தீயநினைவுகள் ஆசைகள் உள்ளத்தினுள்ளே புகாதவாறு விழிப்போடு இருத்தலே விழித்திரு என்பதாகும்.

- மனிதன் அடிக்கடி இறைவனை மறந்து விடும் சந்தர்ப்பங் களுண்டு. அதுவுமன்றி புலன்களுக்கும் உடலுணர்வுகளுக்கும் அடிமையாகி விடும் சந்தர்ப்பங்களுமுண்டு. இவற்றையெல்லாம் கடந்து இறைவன் ஒருவரே உண்மைப்பொருள் என்பதை மறவாது வாழ்வதற்காகவும் புலனடக்கத்தை மேற்கொள் வதற்காகவும் விரத நியதிகளை நம்முன்னோர் ஏற்படுத்தினர்.

- பிரதோஷ விரதம் அனுட்டிப்போர்க்கு மட்டும் மன்றி அவர்களின் குடும்பத்தாருக்கும் அவர்களை சார்ந்தவர்களுக்கும் பயன் தரும் விரதமாகும்.

- பிரதோஷ காலத்தில் நியமமாக மெய்யன்போடு சிவதரிசனம் செய்வோருக்கு கடன் வறுமை நோய், பயம் கிலேசம் அபமிருத்து, மரணவேதனை, பாவம் நீங்கும்.

✸ ஏகாதசிநாளில் சோறு உண்ணல் ஆகாது என்பதே விதி. உபவாசம் இருப்பது உத்தமம். உபவாசம் இருக்க இயலாதவர்கள் பால் பருகலாம். இரண்டொரு பழங்களை உண்ணலாம்.

✸ ஏகாதசி விரதம் அனுட்டிப்பதால் உடம்புக்கும் நல்ல உறுதியும் பயனும் உண்டாகிறது. பிறவி தோறும் செய்து வந்த பாவங்கள் நீங்குவதோடு இனிவரும் பிறப்புக்களுக்கு நல்ல பயன் கிடைக்கிறது.

✸ விரதங்களால் மனம் கட்டுப்படுகின்றது. பஞ்சமாபாதகங்கள் படிப்படியாக குறைகின்றன.

✸ விரதம் அனுட்டிப்பதால் அங்கும் இங்கும் அலையும் மனம் ஆறஅமர ஒடுங்குகின்றது. நல்ல வழியில் நம்மை நடத்த மனம் தயாராகின்றது.

✸ விரதத்தின் மகிமையால் தூய்மையுள்ள சிந்தனைகள் தோன்ற இடம் அளிக்கின்றது. கடவுள் பக்தியை தூண்டுகிறது.

✸ விரதத்தை பயபக்தியொடு அனுட்டிப்பதால் படிப்படியாக மனம் பரிசுத்தம் அடைகின்றது. தியானம் செய்ய வழிபிறக்கின்றது.

✸ விரதத்தால் உணர்சசிகள் ஆவேசங்கள் அடங்குகின்றன. தவவாழ்வு வாழ வழிபிறக்கின்றது.

✸ மனிதரின் கொடிய பகைவனான நாக்கு அடங்குவதற்கு உபவாசம் சிறந்த வழி என்பது பெரியவர்களின் அனுபவம்.

✸ உபவாசத்தால் பஞ்சமாபாதகங்கள் அகலுவதோடு சகவாசத்தால் நீங்காத பல கோளாறுகளும் நீங்குகின்றன.

✸ உபவாசம் இருத்தல் யோக மார்க்கத்திற்கு உதவியாகும்.

✸ விரதகாலத்தில் புலன்களை அடக்கி இறை சிந்தனையில் மனத்தை ஈடுபடுத்துவது ஆன்ம ஈடேற்றத்திற்கு சாலச் சிறந்தது.

# THE CHILDREN'S EDUCATION TRUST OF CANADA

## குழந்தைகளின் கல்விக்கான நம்பிக்கை நிதியம் – கனடா

**OFFERED TO THE PUBLIC BY**
**CHILDREN'S EDUCATION FUNDS INC.**
**A VERY DIFFERENT R.E.S.P**

அரசாங்கத்தின் இலவச 20% நன்கொடையும் வழங்கப்படும் அரசாங்க அங்கீகாரம் பெற்ற புலமைப்பரிசில் சேமிப்புத் திட்டம். இருவருட டிப்ளோமா பத்திரப் படிப்பைப் பூர்த்தி செய்து எல்லாப் புலமைப் பரிசில்களையும் பெற்றுக் கொள்ளலாம்.

FOR MORE INFORMATION PLEASE CONTACT

**Siva Kanapathypillai**



சிறந்த சேவையையும், ஆலோசனைகளையும் பெற தொடர்பு கொள்ளுங்கள்:

சிவா கணபதிப்பிள்ளை

Bus: 416 -438 -0660 / 416-438-3578
Res: 905 -472-1139 Call: 416-899-6044
FAX: 416 -438 -8532

2100 Ellesmere Road, Suite#307, Scarborough, Ontario M1H 3B7

# APPLEMORE

# AUTOMOTIVE INC.

## வாகனப்புகை வெளியேற்றப் பரிசோதனை

ONTARIO'S DRIVE CLEAN
For the air we breathe

**Ontario Emission Inspection**



ஒன்ராறியோ அரசாங்கத்தினால்
அங்கீகரிக்கப்பட்ட வாகனப்பரிசோதனை நிலையம்
குறைந்த விலையில், குறைந்த காலத்தில்
குறையில்லாது உங்கள் வாகனத் திருத்த
வேலைகளை செய்து கொள்ள வாருங்கள்

**TEL: (416) 285-4998**

**435 MIDWEST ROAD, UNIT # 1A & 5B**
**SCARBOROUGH, ONT.**

# முருகன் புத்தகசாலை



இலங்கை, இந்தியாவில் இருந்து
நேரடியாக புத்தகங்கள், பத்திரிகைகள்
இறக்குமதி செய்து விற்பனை
செய்கிறோம்

அதிவேக துரித பணமாற்றுச் சேவை

**WESTERN UNION
MONEY TRANSFER**

**GTA MALL, 5215 Finch Ave. E. Unit 109**
**TEL: 416-321-0285**

# விவேகா அச்சகம்

VIVEKA Printers

பலவர்ண அச்சு வேலைகளை
மிகக்குறைந்த
விலையில் தரமாகவும் பெற்றுக்கொள்ள நாடுங்கள்.

Book Publishing, Printing, Binding
Graphic Designs, Web Designs, Digital Colour Copies,
Digital Black & White Copies

**1911 KENNEDY ROAD, UNIT # 100**
**TEL: 416-807-7468**
**416-410-6401**